மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ.இரா.கண்ணப்பர்

மலர் 9] பரிதாபி ஞு - மார்கழி மீ [இதழ் 2

155-வது மூலிகை

[விலை 50-காசு

உ
முருகா.
'மூலிகை மணி'
(சித்த மருத்துவ மாத இதழ்)
ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும்
வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.
பொறுப்பாசிரியர் : க. வெங்கடேசன், B. Sc.,
ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

மார்கழி இதழில்

1.	மயிலேறி வருவான் முருகன்!	(பாட்டு) ...	1
2.	கார்ட்டூன்	...	2
3.	ஏமாறச் சொன்னது நானோ — என்மீது கோபம் ஏனோ?	(தலையங்கம்) ...	3
4.	ஆலோசனைக் குழுவின் பணிகள் பற்றிய ஆய்வு	...	11
5.	நம் நாட்டு மூலிகைகள்	...	13
6.	நோயும்-மருந்தும் (கேள்வி-பதில்)	...	17
7.	மருந்து சுத்தி முறைகள்	...	25
8.	The Fundamental Principles of Kalpa System of Medicine	...	30
9.	இழுக்க ... இழுக்க ...?	...	35
10.	சிந்தனைத் தேன்	...	41
11.	தலை முதல் கால் வரை	...	42
12.	மஞ்சள் ஓர் நோய்த் தடுப்பு மூலிகை	...	45
13.	நம் நாட்டுச் சித்தர்கள்	...	49
14.	மூலிகை அகராதி	...	53
15.	அனுபவம் உணர்த்தும் உண்மை	...	55
16.	இதய ஒலி	...	56

தொலைபேசி எண் : 726. த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

மூலிகை மணியில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் மூலிகை மணி பதிப்பகத்திற்கே உரிமை உடையது. கட்டுரைகள், கவிதைகள் அனைத்திற்கும் எழுதிய ஆசிரியர்களே பொறுப்பு.

மயிலேறி வருவான் முருகன்!

பல்லவி

மயிலேறி வருவான் முருகன் — உளம்
கனிவோடு பதம்நாடி புகழ்பாடும் அன்பர்க்கு
அநுபல்லவி (மயிலேறி)
அலைந்தலைந்து நாளும் அவதிப் படுவோர்க்கு
அழியாத சுகம் நல்க அன்பாக என்றுமே
சரணம் (மயிலேறி)
அன்புடன் ஔவைக்கு அருள்மழை பொழிந்தான்
அருணகிரிக்கன்று அருந்தமிழ் உரைத்தான்
பரிவுடன் அவன்பாதம் பணிந்திடும் அடியார்க்கு
பசித்திட அமுதூட்டும் பாரதத் தாயன்போடு
★ (மயிலேறி)

[திருமதி. அமிர்தவல்லி மாணிக்கவாசகம்]
சென்னை.

இந்த படத்தைப் பாருங்கள் :

இந்திய மருத்துவக் துறையில் உள்ள பொறுப்பு வாய்ந்த நான்கு பதவிகளை சித்த மருத்துவரல்லாதவர்கள் பொறுப் பேற்றுள்ளார்கள். படத்தில் உள்ள சித்த மருத்துவரல்லாத ஒருவர், நான்கு பதவிகளில் இரண்டு பதவிகளைத் தாமே ஏற்று உள்ளார். மிகுதியான இரண்டையும் சித்த மருத்துவரல்லாத இருவர் வகித்து வருகின்றனர். சித்த மருத்துவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களை ஏன் இயக்குனர் துறை நிர்வாகத்திலிருந்து ஒதுக்கியும், ஒடுக்கியும் வைத்துள்ளீர் கள்! என்று தான் அமைச்சர் அவர்களைக் கேட்டேன். பதிலில்லை! கேட்டுக் கொண்டிருக்கிறேன் — பதில் வரவில்லை ஆனாலும் நியாயம் கிடைக்கும் வரை கேட்டுக் கொண்டு தான் இருப்பேன். பதில் வருமா?

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.— (தாயுமானவர்)

மலர் 9] பரிதாபி ஹு மார்கழி மீ டிச-72 [இதழ் 2

பெயர் மாற்றம் பற்றிய தலையங்கத் தொடர்-10.

ஏமாறச் சொன்னது நானோ! என்மீது கோபம் ஏனோ?

தமிழக மெங்கும் கடந்த ஒரு மாதமாக வீசிய "அரசியல் புயலுக்குப்பின்" தி. மு. க ஆட்சி வாழ்க! என்ற வாழ்த்தொலியுடன் விட்டுப் போன 'பெயர் மாற்றம் பற்றிய' தலையங்கத் தொடரினைத் தொடர்கின்றேன். வாழ்த்துவதற்குரிய ஒரே காரணத்தினை, எவ்வித சார்புமின்றி வெளிப்படையாகக் கூறுவதானால், அந்த காரணம் கடந்த இரண்டு ஆண்டுகளில், கலைஞர் ஆட்சி சித்த மருத்துவத்தின் பால் காட்டி வந்த அக்கறையே யாகும்.

(1) தனி இயக்குனரை நியமித்தது.

(2) தமிழக மெங்கும் 11-மாவட்டங்களில் சித்த மருத்துவ மனைகளைத் திறந்து வைத்திருப்பது.

(3) சென்னை நகரில் அண்ணா மருத்துவ மனை உள்பட மூன்று இடங்களில் சித்த மருத்துவ மனைகளை செயல்பட வைத்துள்ளது.

(4) பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியை 18 இலட்சம் ரூபாயில் விரிவுபடுத்துவது; (post graduate studies) பட்ட மேற்படிப்பினைத் துவக்கியுள்ளது.

(5) தமிழக சித்த மருத்துவ ஆலோசனைக் குழுவினை அமைத்திருப்பது.

இது போன்ற ஆக்கப் பணிகளை நினைக்கும் போது உள்ளபடியே இந்த ஆட்சி, 'சித்த மருத்துவ வளர்ச்சிக்காக வேனும்' இன்னும் 10 ஆண்டுகள் இருக்கத் தான் வேண்டும் என்று எண்ணத் தோன்று கிறது. எனவே தான், இந்த ஆட்சி பற்றி சிலர் 'ஒழிக' என ஒலிக்கும் நேரத்தில் நாம் (மூலிகை மணி) 'வாழ்க' என்று முழங்கு கின்றது. இந்த முழக்கத்தின் பின்னணி, "சித்த மருத்துவத்தில் தி. மு. க. காட்டும் அக்கறையே" யாகும்.

இனி, தலையங்கத் தலைப்பினை நோக்குவோம். ஏதோ ஒரு திரைப்படப் பாடலின் முதலடியாக இருக்கிறதே என சிலர் நினைக்கக் கூடும். உண்மை தான்! தலையங்கம் எழுத நான் உட்கார்ந்த போது, எங்கிருந்தோ இந்தப் பாடலின் முதலடி மிதந்து வந்து என் காதில் மோதியது மோதிய அந்த வரிகளையே தலையங்கத் தலைப் பாகக் கொண்டேன். அண்மையில் தலைமைச் செயலகத்தில் தமிழக அரசின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த நலத்துறை அமைச்சர் வந்ததும் வராததுமாக, மூலிகை மணியின் தலையங்கங்கள் பற்றியும்; தலையங்கங்கள் எழுதி வரும் என்னைப் பற்றியும் சூடாக நான்கு வார்த்தைகள் கூறினர். அதன் எதிரொலியே இந்தத் தலையங்கத்தின் தலைப்பாகியது.

அமைச்சர் கூறியது :—

"பெயர் மாற்றம் பற்றி 'மூலிகை மணி' பலவாறு எழுதி வருகின்றது. அதுபற்றி பேச அதன் ஆசிரியர் என்னிடத்தில் வந்திருந்தால் கூட பரவாயில்லை; ஆனுல், அவர் மகன் வந்து பேசிவிட்டுப் போனுர். இளைஞர்கட்கே உரிய உணர்ச்சியும், உரிமையையும் பயன்படுத்தி, பெயர் மாறறம் செய்துவிடலாம் என்று நினைப்பது முடியாத காரியம்" என்ற கருத்தில் அமைச்சர் அன்பழகர் அறிஞர்கள் கூடிய அந்த குழுக் கூட்டத்தில் என்னையும் இழுத்து விட்டிருந்தார். எனவே, அவருக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

அன்புள்ள அமைச்சர் அவர்களே!

நான் தலையங்கங்கள் எழுத வேண்டிய சூழ்நிலையைச் சுருக்க மாகக் கூறுகிறேன். 1964-ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நடந்த போது ஆரம்பிக்கப் பட்டது 'மூலிகை மணி'. அப்போது 'சித்த மருத்துவத்தினை' காங்கிரஸ் ஆட்சி எவ்விதம் நடத்தியது என்பதெல் லாம தங்கட்குத் தெரிந்ததாகும். அந்த ஆட்சியில் வெளிவந்த

மூலிகை மணியில் வெளியான தலையங்கங்களில், அரசாங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளை எழுதி, எழுதி, என் தந்தையின் கரங்கள் ஓய்ந்து விட்டன. பேனாவும் தேய்ந்து விட்டது! பலன் ஒன்றும் கிட்டவில்லை. மனம் வெறுத்து அவர், மூலிகை ஆராய்ச்சியில் தமது முழு கவனத்தையும் செலுத்தத் தொடங்கினார். 1969-இல் நான் B. Sc., பட்டம் பெற்று, 'மூலிகை மணி' யின் பொறுப்பினை ஏற்றேன். அப்போது தான் கலைஞரும் ஆட்சி ஏறினார்.

யான் மூலிகை மணியில் பொறுப்பேற்ற பின், சித்த மருத்துவ வளர்ச்சி பற்றிய முழு செய்திகளையும் திரட்டினேன். அந்தோ பரிதாபம்! கேட்பாரற்று கிடந்தது. முறையான வளர்ச்சி பெறாத தற்குக் காரணம், "சித்த மருத்துவத்திற்கு, அரசின் அதிகார பூர்வமான, சட்டபூர்வமான பாதுகாப்பு கிடைக்காததே யாகும். இடையில் ஆயுர்வேத, யூனானி மருத்துவர்கள் செய்த சதிகளும் காரணம்" என்று ஆதாரத்துடன் தகவல்கள் எனக்கு கிடைத்தன. அவைகளை யெல்லாம் ஒன்று திரட்டி, சமயம் வரும்போது அரசுக்கு உணர்த்த நினைத்தேன். தாங்கள் நலத்துறை அமைச்சர் பதவிக்கு வந்தீர்கள். யான் 1971-ல், சென்னை பச்சையப்பரில் தமிழ் எம்.ஏ., சேர்ந்தேன். என்ன பொருத்தம் பார்த்தீர்களா!

◎ பச்சையப்பரில் பேராசிரியராகப் பொறுப்பேற்று தமிழ் கற்றுக் கொடுத்தவர் தாங்கள்.

◎ பச்சையப்பரில் தமிழ் மாணவனாக வந்து தமிழ் கற்க சேர்ந்தவன் நான்.

◎ பச்சையப்பர் கல்லூரியில்
தமிழ் பாசறையினை உருவாக்கியவர் தாங்கள்.

◎ அந்த பாசறையில் உருவாகி வருபவன் நான்.

இருவரின் தமிழ் உணர்ச்சிக்கும் உந்துதலாக இருந்தது — பச்சையப்பர் கல்லூரி. எனவே, தாங்கள் குறிப்பிட்ட "இளமை உணர்வும், உரிமையும்" பச்சையப்பர் தந்த பரிசாகும்.

"சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு ஊறுபாடு செய்தவர்களை அம்பலப்படுத்த எண்ணி சமயம் பார்த்திருந்த போது, தாங்கள் அமைச்சரானது என்னுடைய நற்பேருகும்.

'பெயர் மாற்றம்' பற்றி என் தந்தையிடம் கலந்தேன். அவர் கூறினர், ''எனக்கு வயது 53 ஆகிவிட்டது 30 ஆண்டு காலம் சித்த மருத்துவர்களோடும், அரசாங்கத்தோடும் போராடி ஓய்ந்து விட்டேன். மூலிகை மணியை நிர்வகிக்கும் பொறுப்பு உனதாகி விட்ட பிறகு, சித்த மருத்துவத்தினை வளர்க்க நீ செய்யும் முயற்சிகட்கு ஒரு காலும் தடையாக மாட்டேன். மகனே! உன் சமர்த்து'' என்று கூறிவிட்டார் இது தான் கடந்த பத்து தலையங் கங்கள் உருவானதற்கான பின்னணி.

அமைச்சர் அவர்களே! இப்போது கூறுங்கள்!!

நான் ஒரு தமிழ் மருத்துவப் பரம்பரையில் வந்தவன்.

''சித்த மருத்துவம் தமிழகத்தின் உடைமை'' என்று கருதி,

''சித்த மருத்துவத்திற்கு ஆக்கம் தேடுவது என் கடமை'' என்று உணர்ந்து,

''சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்குரிய'' உரிமைகளைப் பெற,

''அரசுடன் போராடாமல் இருப்பது மடமை'' என்று எண்ணியே

தலையங்கங்கள் எழுதினேன்.

''என் தலையங்கங்களில் என்ன தவறு கண்டீர்கள்?'' ''என் தலையங்கங்களில் என்ன அவதூறு கண்டீர்கள்'' என்று தலை வணங்கிக் கேட்கிறேன். தவறும், அவதூறும் இருந்தால் அன்புகூர்ந்து கூறுங்கள் மாருக, 'சிறியவன்' என்று பட்டம்கட்டி ஒதுக்கி விடாதீர்கள். கடுகு சிறுத்துத்தான் இருக்கும். உளி சிறிய தாகத்தான் இருக்கும். கடுகின் காரமும் — உளியின் கூர்மையையும் பற்றி யான் கூற வேண்டியதில்லை.

யான் எழுதிய 10 தலையங்கங்களிலும், தனிப்பட்ட முறையில் யாரையும் தாக்கி எழுதியதே இல்லை. யான் திரட்டிய தகவல்கள் அனைத்தும் மூலிகை மணி வாசகர்களின் பேருழைப்பினுல் கிடைத் தவை. எனவே, ''சிறிய பையன் கூறுகின்ருன்; இளம் இரத்தம்'' என்று அன்புகூர்ந்து யான் எழுதியவற்றை ஒதுக்க வேண்டாம். எழுதிய என்னை மறந்து விடுங்கள்.

என்னைப் பொருட்படுத்த வேண்டாம்!

எழுதிய கருத்துக்கள்,

சித்த மருத்துவத்திற்கு எதிராக நடந்த சதிகள்,

ஆகியவற்றை ஆராய்ந்து உரியவர்களைத் தண்டியுங்கள்.

மறைந்தும், மறைத்தும் வைக்கப்பட்ட சித்த மருத்துவத்தினை புதுப்பிக்க, என் போன்ற இளைஞர்கள், மூலிகை மணியின் வாயிலாக ஏராளமானோர் உருவாகி வருகின்றனர். "இளித்த வாயர்களாக இருந்தது போதும், எத்தர்களின் இடுப்பொடித்து சித்த மருத்துவத்தைக் காப்போம்" எனக் கூறும் இளைஞர்களின் உரிமைக்குரலை தாங்கள் கேட்கும் நாள் நெருங்கி வந்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு முன்னோடியாய்த்தானோ. என்னவோ, அறிவாளர்கள் கூடிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் என்னைப் பற்றி மேற்கண்டவாறு கூறியுள்ளீர்கள்.

இளைஞர்களின் உணர்ச்சிக்கும், உரிமைகளுக்கும் தமிழகத்தில் எந்த அளவுக்கு வரவேற்புள்ளது என்பது 1967-தேர்தல் நிரூபித்தும் கூட, தாங்கள், "பெயர் மாற்றத்தினை இளைஞர் உரிமையும் உணர்ச்சியும் மாற்ற முடியாது" என்று கூறியுள்ளமை எனக்கு வியப்பளிக்கிறது.

எனவே, என் வயது - என் அனுபவம் - என் அறிவு பற்றிய ஆராய்ச்சியில் இறங்காமல். தமிழ் நாட்டின் இளைஞன், தமிழ் மருத்துவ பரம்பரையில் ஊறி ஊறி வந்தவன். சித்த மருத்துவத்திற்காகவே நடத்தும் ஒரு பத்திரிகையின் பொறுப்பாசிரியன், "என்ன தான் கூறுகின்றான்" என்று படித்து, "எவ்வளவு தூரம் உண்மையும் நியாயமும் உள்ளது" என்று ஆய்ந்து, ஆழ்ந்து சிந்தியுங்கள் பெயர் மாற்றம் எந்த அளவுக்கு தேவையானது என்பது புரியும்.

> கூறுபவன் சிறியவன்; அவனை மறந்து விடுங்கள்!
>
> **கூறப்படும் கருத்துக்கள் பெரியவை;**
>
> **அதனை செயல் படுத்துங்கள்!**

இது என் கருத்து மட்டுமல்ல;

என்னைப் பின்பற்றும் இளைஞர் குழாமின் கருத்துமாகும்.

மூலிகை மணி வற்புறுத்தும் கோரிக்கையின் காரணமும், காரியமும்

சித்த மருத்துவம் விடுதலைக்குப்பின் பெறவேண்டிய வாய்ப்புக்களை மத்திய அரசும், மாநில அரசும் புறக்கணித்தன. இதற்குக் காரணம் ஆட்சியாளர்களிடையே தமிழ்ப் பற்றும், பாசமும், சித்த மருத்துவம் பற்றிய அறிவும், உணர்வும் இல்லாமையுமே ஆகும். மத்திய அரசினை, ஆயூர்வேதக்காரர்கள் "சித்த மருத்துவம் என்பது தனி மருத்துவமல்ல; ஆயூர்வேதத்தில் ஒரு பகுதி" என்று கூறி, மத்திய, மாநில அமைச்சர்களை ஏமாற்றினர்கள். ஏமாறியவர்கள் தமிழ் அமைச்சர்கள். அப்போது சித்த மருத்துவம் கேட்பாரற்று இருந்தது. தொடர்ந்து ஆயூர்வேதக்காரர்கள் செய்த சூழ்ச்சியால் 'சித்த மருத்துவம்' பெயரளவில் கூட தமிழகத்தில் தலையெடுக்கப் படாமல் தடுக்கப்பட்டு, தமிழக மக்களும், அமைச்சர்களும் ஏமாற்றப் பட்டனர்.

1967-வரை இந்த நிலை நீடித்தது. தி. மு. க. ஆட்சியில், இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, "சித்த மருத்துவம்" தனி மருத்துவம் என்று நிருபிக்கப் பட்டு பரவலாகப் பேசப்பட்டதன் பலன், 1970-ல் மத்திய அரசு தனி மருத்துவமாக அங்கீகரித்தது.

1969-வரை தமிழகத்திலுள்ள ஆயூர்வேத, யூனானி மருத்துவர்கள் பேச்சு மூச்சின்றி எங்கேயோ 'அனுமதேயங்களாக' இருந்தனர். 20 000 சித்த மருத்துவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'சித்த மருத்துவத்திற்கு' இயக்குனர் துறை அமைக்க அரசு முடிவு செய்ததை அறிந்ததும், அந்த 'அனுமதேயங்கள்' பழையபடி 'இந்திய மருத்துவம்' என்ற ஆமையைப் புகுத்தினர். அமைச்சர் சாதிகபாட்சா, 'இந்திய மருத்துவம்' என்பதின் சூட்சுமத்தினை அறியாதவர். 'இந்திய மருத்துவம்' என்ற இந்த பெயர் தான் 'சித்த மருத்துவம்' — 'ஆயூர்வேதத்தின் ஒரு பகுதி' என்று கூற அந்த நாளில் ஆதாரமாகியது என்பதை வரலாறு உணர்த்தும்.

1970-இல், இயக்குனர் துறை, ஆயூர்வேத, யூனானி மருத்துவர்களின் தலையீட்டால், மறுபடியும் 'சித்த மருத்துவம்' என்ற பெயர் தமிழகத்தில் தலையெடுக்கா வண்ணம் செய்து விட்டனர். 'இந்திய மருத்துவம்' என்ற மாயைக் கண்டு தமிழக அரசு ஏமாந்து கொண்டிருக்கிறது.

'ஏமாற்றுபவர்களை' ஏமாற்றாதே என்றும்
'ஏமாறுபவர்களை' ஏமாறாதே என்றும்

கடந்த தலையங்கங்களில் தக்க சான்றுகளுடன் எச்சரித்து வந்தேன். கூறிய கருத்துக்களுக்குப் பதிலில்லை. மாறாக, என்மீது அமைச்சர் கோபப்படுகின்றார்.

அமைச்சர் அவர்களே!

“ஏமாறச் சொன்னது நானோ!
என்மீது கோபம் ஏனோ?”

என்ற பாடலின் பொருத்தத்தினை இப்போது புரிந்துக்கொள்ளுங்கள்.

தமிழகத்தில் 20.000-க்கும் மேற்பட்ட சித்த மருத்துவர்கள் உள்ளனர். சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று நடந்து வருகிறது. 11-மாவட்டத் தலைநகரில் சித்த மருத்துவ மனைகளும், நூற்றுக் கணக்கான பஞ்சாயத்துக்களில் சித்த மருத்துவ மனைகளும் உள்ளன. இது மட்டுமின்றி, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களும் உள்ளன.

ஆயூர்வேத, யூனானி மருத்துவங்கள் தமிழகத்தில் பெற்றுள்ள நிலை பூஜ்யம் தான். மருத்துவ மனைகளோ, கல்லூரியோ, மருத்துவர்களோ அறவே கிடையாது! பெயருக்கு ஒன்றிரண்டு பேர்கள்தான் உள்ளனர்.

இந் நிலையில், இயக்குனர் அலுவலகப் பதவிகள் நான்கினில் ஒன்று கூட சித்த மருத்துவத்திற்கு ஏன் ஒதுக்கப் படவில்லை என்பதே என் கேள்வி. எனவே, உடனடியாக ‘இந்திய மருத்துவம்’ என்ற பெயரை மாற்றுவதன் மூலம்,

‘சித்த மருத்துவம்’ — தனி மருத்துவம்

என்ற உண்மை மக்கள் மனதில் மட்டுமல்ல; உலக அரங்கிலும் நிறுவப்படும்.

எனவே, இந்திய மருத்துவத் துறையை கீழ்க்கண்டவாறு பிரிக்கவும்.

இந்திய மருத்துவம்

சித்த மருத்துவம் | ஆயூர்வேதம், யூனானி.

சித்த மருத்துவத்தினை தனியே பிரித்து, இயக்குனர் பதவியை சித்த மருத்துவத் துறையைச் சார்ந்தவருக்கே எப்போதும் அளிக்கவும்.

ஆயுர்வேதம், யூனானி ஆகிய இரண்டையும் இணைத்து ஒரு Joint Director-ஐ, கொண்டு நிர்வகிக்கச் செய்யவும்.

இங்ஙனம் இயக்குனர் துறையை மாற்றி அமைப்பதின் மூலம், மூன்று துறை அதிகாரிகளிடையே 'பதவி மோதல்' ஏற்பட வழியில்லை மூன்று துறைகளும் முறையான வளர்ச்சி பெறும் மூலிகை மணியின் இந்த ஆலோசனையை, ஒதுக்காமல் உடன் ஆய்வு செய்து தக்க பதில் கூறவும்.

இறுதியாக ஒரு வேண்டுகோள்!

"சித்த மருத்துவம்" என்ற பெயரை அமைக்க
எந்த சட்டம் ஆட்சேபனை கூறுகிறது
என்பதை சட்ட ரீதியாகவோ,
அல்லது மத்திய அரசின் குறுக்கீடா, என்பதை
சான்றுகளுடன் கூறவும்.

அடுத்த முறை நான் தங்களை சந்திக்கும் இடம்.

பெயர் மாற்றத்தினை தாங்கள் ஏற்று, அதனை செய்யும் நல் விழாவில், **'சந்தன மாலையை'**

கரத்தில் ஏந்தி தங்களைப் பாராட்ட வருவேன்.

(அல்லது)

தாங்கள் கூறியவாறு,

இளைஞர் உரிமைகளையும் உணர்ச்சிகளையும் திரட்டி

'சித்த மருத்துவம்' பெயர் நிலைநாட்ட

போராட்டத்தில் சந்திப்பேன்!

இங்ஙனம்,
க. வேங்கடேசன்,
பொறுப்பாசிரியர், மூலிகை மணி.

ஆலோசனைக் குழுவின் பணிகள் பற்றிய ஆய்வு

★ — க வேங்கடேசன்

தமிழக அரசின் ஆதரவில் இந்திய மருத்துவ ஆலோசனைக் குழுக் கூட்டம் கடந்த 22—12—72 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்தது. குழுக் கூட்டத்திற்கு அமைச்சர் அன்பழகர் தலைமைத் தாங்கினார்.

மறைந்த டாக்டர் A. சண்முகவேலன் அவர்கட்கு அமைச்சர் குழுவின் சார்பாக அஞ்சலி செய்தார் அடுத்து, புதிதாக குழுவில் இடம் பெற்ற, முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ பெ. அவர்களை வரவேற்றார். சித்த மருத்துவ வளர்ச்சிக்கான பல்வேறு ஆலோசனைகள் விவாதிக்கப்பட்டன இந்த ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். குழுவின நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தேன். நம்முடைய போற்றுதலுக் குரியவர்கள், அமைச்சர் அவர்களும், கி. ஆ பெ அவர்களும் ஆவார்கள்.

அமைச்சர் அன்பழகரிடையே கண்ட நிறைவும் குறையும்

அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆலோசனையையும் அணு அணுவாக ஆய்ந்து, அதன் பலாபலன்களை சட்டபூர்வமாக ஆழ்ந்து நோக்கி விளக்கங்கள் கூறுவது மிகவும் பாராட்டுதற்குரியதாகும். உறுப்பினர்களின் ஆலோசனைகட்கு எவ்வளவு தூரம் அவர் மதிப்பு தருகின்றார் என்பதை இந்த நடைமுறை நன்கு புலப்படுத்துகின்றது. இந்த நடைமுறையை தற்போதைய இயக்குனர். அமைச்சரிடமிருந்து கற்றுக் கொண்டால், சிறந்த நிர்வாகியாக முடியும்.

ஒரு கட்டத்தில் அமைச்சர் கூறினார் :

" நான் இந்த ஆலோசனையை ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்கு இத்துணை காரண காரியங்களைச் சொன்னால் தான், மூலிகை மணி கண்ணப்பர் திருப்தி அடைவார். வெறுமனே, 'ஏற்றுக்கொள்ள முடியாது' என்று பதிலளித்து விட்டால், அடுத்த மூலிகை மணி இதழில் அதைப் பற்றி நான்கு பக்கம் எழுதிவிடுவார். எனவே, கால தாமதமானாலும், ஒவ்வொரு ஆலோசனையையும் தீர ஆலோசிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன் " என்று கூறினார் இந்த விளக்கம் அவருடைய பொறுப்புணர்ச்சியைத் துல்லியமாக வெளிப்படுத்துகிறது பேராசிரியராகப் பணியாற்றியவர் அல்லவா? அதன் முத்திரை நன்றாகத் தெரிகிறது. இந்த பண்பு அவரிடம் நிறைந்து இருப்பது, 'சித்த மருத்துவ வளர்ச்சிக்கு' பெரிதும் உதவும்.

ஆனாலும்,

இவ்வளவு திறமைசாலியான அவரிடம். சிறு குறையொன்று காணப்படுகிறது. அதனைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், சித்த மருத்துவம் பரவலாக பரவியுள்ளது. மற்ற மருத்துவங்கள் 'அண்ணு மருத்துவ மனை' காம்பவுண்டு சுவருக்குள் அடங்கியுள்ளது.

இந்த நிலையில், 'சித்த மருத்துவம்' பெயர் மாற்றத்தினைச் செய்யவும். இயக்குனர் நிர்வாகத் துறையில், சித்த மருத்துவர்களைச் சேர்க்காததற்கும் அவர் கூறும் ஒரே காரணம்,

'பெயரை மாற்றினுல்; மத்திய அரசு நிதி உதவி செய்யாது'
மற்றைய மருத்துவ முறைகளையும் வளர்க்க
தமிழக அரசுக்கு பொறுப்புள்ளது; என்பதாகும்.

நம்மைப் பொறுத்த வரை, தமிழகத்தில் ஆயூர்வேத, யூனானி மருத்துவங்களை ஒழித்துவிட வேண்டும் என்பதில்லை. உண்மை நிலை என்னவென்ருல், அவைகளை வளர்க்க இன்று தமிழகத்தில் ஆளில்லை! எனவே, தமிழகத்தின் திட்டம் அனைத்தும் 'சித்த மருத்துவத்திற்கே' ஒதுக்க வேண்டிய சூழ்நிலை இயல்பாகவே உள்ளது. எனவே தான் இயக்குனர் பதவி போன்ற அதிகார முள்ள பதவிகட்கு சித்த மருத்து வர்களுக்கு முன்னுரிமை தரக் கோருகின்ருேம்.

"சித்த மருத்துவத்திற்கு-முன்னுரிமை" என்ற சொல்லின் பொருளை முழுமையாக, அமைச்சர் உணர்ந்தால், 'பெயர் மாற்றம்' போன்ற மூலிகை மணியின் பிரச்னைகள் ஒரு நொடியில் தீர்ந்துவிடும். மற்றபடி, 'சித்த மருத்துவம்' என்ற பெயர் மாற்றத்திற்கு எதிராக ஆட்சேபனை எழுப்பிட மத்திய அரசுக்கோ, வேருெருவருக்கும் சட்ட பூர்வமான உரிமை கிடையாது என்பதே எமது வாதம். மத்திய அரசு செய்யும் நிதி உதவி தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதே ஆகும். அதற்காக மத்திய அரசு இடும் ஆட்சேபனைகட்குத் தலைவணங்க வேண்டிய அவசியமில்லை.

அடுத்து, ஆலோசனைக் குழுவில் புதிதாக வந்துள்ள திரு. கி. ஆ. பெ. அவர்களின் பணி மெச்சத் தகுந்ததாகும். சில பிரச்னைகளை சிலர் கூறினுல்தான் எடுபடுகிறது. அதுபோல், நாம் இதுநாள் கூறிவந்த பிரச்னைகளை திரு கி. ஆ. பெ. அவர்கள் கூறும் போது, அதற்கு தனி மகத்துவம் மட்டுமல்ல, உரிய பதிலும் தகுந்த முறையில் வருகின்றது. சித்த மருத்துவத்திற்குள்ள இந்த நெருக்கடி நேரத்தில் திரு. கி. ஆ. பெ. அவர்களின் பணி 'வான் மழை' போன்று இன்றியமையாது தேவைப்படுகின்றது.

ஆக, ஆலோசனைக் குழுவினைப் பற்றி ஒரு வார்த்தையில் கூறவேண்டுமானுல், 'It is a catalyst' என்று கூறலாம். சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆலோசனைக் குழு ஒரு 'கிரியா ஊக்கி' யாக உள்ளது.



‘பண்ணைக் கீரை’

(155-வது மூலிகை)

‘பண்ணை’ என்பதன் பொருள் பயிரிடும் நிலம் என்பதாகும் உழவன் உழுது பயிரிடும் நிலங்கள் யாவற்றிற்கும் பண்ணை என்றுதான் பொருள்.

இந்த பண்ணையைப் பெயராகக் கொண்ட மூலிகை இனமும் உள்ளது. இது உணவாகக் கொள்ளும் கீரையினமாதலால், இதற்குப் பண்ணைக் கீரை என்றே வழக்குச் சொல்லாக அமைந்துள்ளது.

பண்ணைக்கீரையின் வடிவ அமைப்பு ஏறத்தாழ நெய்ச்சட்டிக் கீரையின் இலை போலவே அமைந்துள்ளது இதன் இளம் கீரைகளைத்தான் உணவாகக் கொள்வார்கள்.

இந்த பண்ணைக்கீரை முற்றி விட்டால் உயர்ந்த நீளமான வெள்ளைக் கதிர் பூக்களை விட்டு பண்ணைகளில் தலை காட்டும். இந்தப் பூக்கள் தான் “நான் பண்ணைக்கீரை” என்பதைக் காட்டும்.

ஒரு சிலருக்கு இளம் வயதிலேயே தலைமுடி வெள்ளையாக மாறிவிடும்! இத்தகைய தலையை உடையவர்களைக் கண்டு மற்றவர்கள்,

"என்ன! உன் தலை பண்ணைப்பூ கதிர்கள் போல வெளுத்துப் போய்விட்டதே" என்பார்கள் இந்த ஒரு உதாரணத்தைக் கொண்டு பண்ணைப் பூவான கதிர்கள் பால் நிறமான வெள்ளை நிறமுடையது என்பதனை தெரிந்துக் கொள்ளலாம்.

பண்ணைக் கீரையில் இரு வகையுண்டு. ஒன்றின் இலை நெய்ச்சட்டி இலை போல அகலமாக வளரும். இதுவே உணவில சேர்க்கக்கூடியதாம். இதன் ருசி ஏறத்தாழ அரைக்கீரையின் ருசி எப்படியிருக்குமோ? அப்படி இருக்கும். மற்றொன்று இலை அகலமாயிராமல் நீண்டு சிறுத்து இருக்கும். இதற்கு ஆண் பண்ணை என்பார்கள். அகராதிகளில் இதற்கு நறும் பண்ணை, சிறு பண்ணை என்று குறிப்பிடுவார்கள். சில அகராதிகளில் புனல் பண்ணை புற் பண்ணை என்றும் காணக் கிடைக்கிறது குணத்திலும் செய்கையிலும இரண்டும் ஒன்றேயானாலும் ருசியில் அகலமான இலையைக் கொண்ட பண்ணைக் கீரை ஒன்றே சிறப்புடையதாகும்

குணமும் பயனும்

பண்ணைக் கீரையின் குணம் சிறப்பாக உடலை துவர்ப்பிக்கச் செய்யும். உள்ளழல் ஆற்றும், மலமிளக்கும், நு-புழுக் கொல்லியாகவும், புண்ணழுக்காற்றும் செய்கையையும் உடையதாகும்

கீரையின் பயன்

பண்ணைக் கீரையை பருப்புடன் சேர்த்து இஞ்சி, கொத்தமல்லி, பெருங்காயம், கருவேப்பிலை போட்டு கடைந்து பகல் உணவில் சிறிது நெய்யும்விட்டு சாப்பிட அரைக்கீரையின் ருசியும், உடல் நலமும் சக்தியும் பெருகும். சுருங்கச் சொல்லப் புகின் ஓயாமல் ஆங்கில வைட்டமின் மாத்திரைகளைச் சாப்பிட்டு வருபவர்கள் அதனை விடுத்து இந்தப் பண்ணைக் கீரையை பகலுணவில் உண்டு வந்தால் வைட்டமின் 'A' முதல் 'Z' வரையில் உள்ள எல்லா சத்துகளையும் பெறலாம்.

குறிப்பாக, இக் கீரையை உணவாக உட்கொண்டால் மலத்தை இளக்கி விடும். மலக்குடல், ஜீரணக்குடல் யாவும் பலப்படும். உண்ட உணவு உடம்பில் பற்றும். அத்துடன் சர்ம நோய்கள், கரப்பான், ரணம், கிரந்தி போன்ற நோய் களும் வேறு சிகிச்சையின்றி விலகிப் போகும்.

ஆனால் பண்ணைக் கீரையின் இலை கொழுந்தாகப் பறித்து சமையலில் சேர்ப்பது நன்மை தரும்.

பெரும்பாட்டு உதிரப் போக்கு நிற்க

பண்ணைக் கீரையின் பூக்களை மட்டும் 10-க்கு குறையாமல் பறித்து 500 மில்லி. தண்ணீரில் போட்டு குடிநீராகக் காய்ச்சி, வடிகட்டி காலை மாலையாக ஒரு குவளை குடித்து வர, உதிரமாகக் கொட்டும் பெரும்பாடு போக்கு மூன்று நாளில் நின்றுப் போகும். இதையே வெகு நாட்பட்ட பேதிகளில் கொடுக்க அந்த பேதியும் நின்று போகும்.

மாட்டுப் பொங்கலுக்கு பண்ணைப்பூ

தை மாதம் பிறந்ததும் 'மாட்டுப் பொங்கல்' விழாவில் கரும்பு, வடை, முறுக்கு, மாவிலை தோரணங்களில் பண்ணைப் பூவையும் கட்டி மாலையாகப் போட்டு, மாட்டை விரட்டுவது நம் நாட்டு பழக்கமாகும். இதனால் மாட்டுக்கு ஏதோ ஒருவித நன்மை உண்டாகும் என்பது நமக்குத் தெரியாவிட்டாலும், நம் முன்னோர்கள் இதனை தெரிந்து வைத்துக் கொண்டு தான் தொன்று தொட்டு இப்பழக்கத்தை அனுசரித்து வருகிறார்கள்.

பண்ணைப்பூ விதையின் பயன்

கதிர்களில் உள்ள விதையைக் கசக்கி எடுத்து விதைகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு 10 கிராம் அளவு பொடி செய்து 200 மில்லி பசும் பாலில் அதைப் போட்டுக் காய்ச்சி காலை மாலையாக 3-நாட்கள் குடித்து வர, குத்திருமல், கப இருமல், மூத்திரதாரை சம்பந்மான நோய்கள், ரத்த பேதி, சீதபேதி ஆகியவைகள் நீங்கும். இம் முறைப்படி சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை சாப்பிட்டு வர குணமாகி விடும். ஆனால் உப்பு, புளி, காரம் இவைகளை பாதி யாக குறைத்து இச்சா பத்தியம் இருக்க வேண்டும்.

குறிப்பாக :— குடல் பலமிழந்தவர்கட்கு இந்தப் பண்ணைக் கீரை மிகவும் ஏற்றது. வீணாக குடல் ரணம் ஆனவர்கட்கு அறுவை சிகிச்சை தான் செய்ய வேண்டும் என்று ஆங்கில மருத்துவர்கள் கூறும் போது, அதை முழுக்க முழுக்க நம்பி, வயிற்றை ஆபரேஷன் செய்துக் கொள்ளாமல், பண்ணைக் கீரையை நாள் தோறும் பகல் உணவில் சேர்த்துக் கொண்டு 40 நாட்கள் கழித்து பிறகு நோய் இருக்கிறதா? என்று பாருங்கள்! பண்ணைக் கீரையின் பயனை பலன் கண்டவர்கள் தான் அறிவார்கள்.

" பண்ணையிளங் கீரையது பற்று மலமிளக்கும்
எண்ணுங் குடலுக் கிதங்கொடுக்கும்—பெண்ணேகேள்
சீதங் கரப்பான் சிரங்குபுண் மாறிவிடுங்
கோதங்கிலை யதனைக் கொள்" (கு. மூ)

பொங்கல் வாழ்த்து!

அன்பார்ந்த வாசக, சந்தா அன்பர்கட்கும், தமிழ்ப் பெருங்குடி மக்கட்கும், குறிப்பாக உழுது பயிர் செய்து மக்கள் பசிப்பிணியைத் தீர்க்கும் விவசாயிகட்கும் எமது இதயங் கனிந்த நல் 'பொங்கல் வாழ்த்துக்களை' அர்ப்பணம் செய்கிறோம்.

வாழ்க பொங்கல்!
தழைக்க பயிர் வகை!! ஓங்குக தமிழ்!!!

கிருஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்து!

ஆங்கில புத்தாண்டு பிறந்தது—1973. அதனுடன் ஏசுநாதர் பிறப்பும அகில உலக மக்கள் நினைவிலும் எழும்! நமது இந்திய உபகண்டத்தில் வாழும் கிருத்துவ அன்பர்கள் எல்லோரும் ஏசுநாதரை நினைவுகூர்ந்து ஆடிப்பாடி களித்திடும் வேளையில் மூலிகை மணியின் அன்புநிறைந்த புத்தாண்டு நல் வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறது.

— மேலாளர் : மூலிகை மணி.

உ

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்பட மாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி — பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது. கூடியவரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்.]

❋ ❋ ❋

கே: என் வயது 20. கடந்த 3 ஆண்டுகளாக எனது உடல் சீர்கெட்டு போய்விட்டது. சுய இன்பத்தில் ஈடுபட்டு உடல்நிலையை கெடுத்துக் கொண்டேன். இரவில் தூக்கம் கிடையாது. இந்திரியம் வெளியாகிறது. உடல் வலி ஏற்படுகிறது. என் உடல் சீர்பட ஒரு வழி கூறவும்.

ப: மூன்று ஆண்டுகள் என்பது சாதாரணமான நாட்களா? முதல் முதலாக சுய இன்பம் அனுபவித்த பின்பு, பிறகு அந்த பழக்கத்தைக் கைவிட்டாலும் மனம் அடங்காது தம்பீ! எனவே எண்ணற்ற இன்ப அலைகள் வந்து மனதைத் தாக்கி ஸ்கலிதம் உண்டாகி விடும். இப்படித்தான் உனது உடல் சீர்கெட்டுப் போயிருக்கும். காரம், உரைப்பு, புளிப்பு ஆகியவைகளைக் குறைத்துக் கொண்டு குளிர்ச்சி தரும் உணவுகளை உட்கொள்ளவும். இறை வழிபாடுகளில் மனதை உருக்கமாக செலுத்தி இறைவனையும் வேண்ட வேண்டும். மனதை அடக்க இதுவே சிறந்த வழி. கந்தர் அனுபூதி பாடல் பாராயணம் செய்யவும். மருந்தும் நேரில் கண்டு தேர்வு செய்து சாப்பிடுவதால் நற்பலன் உண்டாகும்.

கே: என் வயது 13. பாவாடை இறுக்கமாகக் கட்டுவதால் இடுப்பில் வெள்ளையாக படைபோல் ஏற்பட்டிருக்கிறது. இதை தடுக்க வழி என்ன?

ப: பாவாடையால் இடுப்பில் வெள்ளையாகாது. உடலில் உள்ள கெட்டநீர் ஒரே இடத்தில் தங்க, பாவாடையை இறுக்கிக் கட்டுவதில் உண்டான வெள்ளை படை உமது குடும்பத்தின் பரம்பரை சொத்து தான். எல்லோரும் தான் பாவாடை கட்டுகிறார்கள். அவர்கள் எல்லோருக்குமா வெள்ளை நிற படைகள் வந்து விடுகின்றது? எந்த நோய்த் தன்மையும் இல்லாத ஒரு குடும்பத்தில் எவ்வளவுதான் பாவாடையை இறுக்கி கட்டிவைத்காலும் எந்தவித படையும் வராது. உங்கள் பாவாடையால் வந்த படைக்கு பூவரசங் காயை உடைத்து தேய்த்து வருவதுடன் பாவாடையை இறுகக் கட்டவேண்டாம்.



கே: என் வயது 20. உடம்பு மிகவும் மெலிந்துள்ளது. சதைப் பிடிப்பு இல்லை. சில சமயம் சக்தி வெளியாகிறது. Cod-liver-oil இன்னும் மாத்திரைகள் சாப்பிட்டும் பயனளிக்கவில்லை. இதற்கு தகுந்த சிகிச்சை முறை கூறவும்.

ப: அன்பு மிக்க தம்பி! சக்தி வெளியாவது மனம் சிற்றின்பத்தில் ஈடுபாடு கொண்டதைக் காண்பிக்கிறது. இதற்கு Cod liver oil பயன் தராது. 20 வயதுடைய உமக்கு திருமணம் ஒன்றே பரிகாரம். இந்த சுகானுபவத்தால் தான் சக்தி வெளியாவது நிற்கும்.

மீன் எண்ணெ மாத்திரைகளால் (cod liver oil) மேலும் உடல் உஷ்ண மடைந்து சக்தி தான் வெளியாகும். உடனே இதனை நிறுத்தி முருங்கை, பசளை, தூதுவளை, அரைக்கீரை போன்றவைகளை உண வில் சேர்ப்பதுடன், உங்கள் வீட்டில் உமக்கு திருமணம் செய்ய முயற்சிகள் நடக்கட்டும்.





கே: எனக்கு வயது 16. நான் ஒரு மாணவன். என்னுடைய பல்லின் முன்னும் பின்னும் மஞ்சள் நிறமான கறை படிந்துள்ளது. இரவில வாயில் உமிழ்நீர் சுரக்கிறது. இதை தடுக்க ஒரு முறை கூறவும்.

ப: மஞ்சள் நிறமான கறை படிந்துள்ளது உமது உடலில் கல்லீரல் பழுதடைந்துள்ளதைக் காண்பிக்கிறது. தினமும் காலையில் கரிசலாங்கண்ணிச் செடியின் வேரால் பல துலக்கிக் கொண்டு வரவும். அத்துடன் அதே கீரையை பல் துலக்கினவுடன் இரண்டு பிடி எடுத்து மென்று தின்று ஒரு முடக்குத் தண்ணீர் குடிக்கவும். இப்படி செய்து வரும் போது புகையிலை, பொடி, புகைப்பது நிறுத்தி மாமிச உணவுகளையும் நீக்கவும். 20 நாளில் உமது பற்கள் மேல் உள்ள மஞ்சள் நிறமான கறை படிவது மறைந்தே போகும்.

கே: குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எளிய முறை - நம்பிக்கையான வைத்தியம் 2, 3 வகைகள் கூறவும்.

ப: பெண்களுக்கு:— பப்பாளிப் பழம், அன்னாசிப் பழம், எள்ளு - வெல்ல உருண்டை ஆகியவைகளை உட்கொள்ள கருத்

தரிக்காது. அதிக சூடான ஆகார வகைகளை சாப்பிட்டு வர வேண்டும். ஆண்கள் மனக் கட்டுப்பாடு வைத்துக் கொண்டு பெண்கள் மாத விலக்கு ஆன 21-ம் நாள் உறவு கொள்ள கருத் தரிக்காது. மனக் கட்டுப்பாடில்லாமல் உறவு கொள்வதில் குடும்பக் கட்டுப்பாடு வெற்றி பெற முடியாது.

கே: என் வயது 27. எனது சிறுநீரகப் பகுதியில் சர்மம் வெள்ளை நிறமாக மாறி வருகிறது. இதைப் போக்க வழி கூறவும்.

ப: உமது உடல், தோற்றம், கைநாடி, மற்றும் சர்ம உஷ்ணம் ஆகியவைகள், முன்னோர்களின் வாழ்க்கை வரலாறு, வசிக்குமிடம், பழக்க வழக்கங்கள், உணவுமுறைகள் சேர்க்கை இவ்வளவும் நேரில் கண்டு, கேட்டு விசாரித்த பின்புதான் உமது சர்மம் வெள்ளை நிறமான உண்மைக் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும் ஐயா! எளிதான கேள்வியல்ல இது.

கே: என் நண்பருடைய தந்தையாருக்கு வயது 60. கால்களை நீட்டவோ, மடக்கவோ, சிரமமாக இருக்கிறது. முழங்காலுக்கு கீழ் வலியுள்ளது. நடப்பதற்கும் சிரமமாக இருக்கிறது. இதை போக்க ஒரு மூலிகை சிகிச்சை எழுதவும்.

ப : முருங்கை மரப்பட்டை, வெள்ளைக் கடுகு, சுக்கு இவை களை அரைத்து முழங்காலுக்குக்கீழ் பற்று போட்டு நெருப்பனல் காட்டி வரவும். இப்படி விடாமல் 1 வாரம் செய்ய எழுந்து நடமாட முடியும். இதில் பயனில்லை என்றால் உத்தாமணி இலையை வதக்கி ஒத்தடம் கொடுத்து வர அவை நீட்ட மடக்க உட்கார வசதி உண்டாக்கும்.



கே : என் மனைவி வயது 37. இடது கை முழங்கைக்கு கீழ் பகுதி 6-மாதமாக வலித்துக் கொண்டு உள்ளது. இதைப் போக்க வழி கூறவும்.

ப : 6-மாதமாக வலிப்பது நீண்ட நாள்பட்ட நோய்க்கு அறி குறியாகும். தழுதாழை இலையை வதக்கி வலிகண்ட இடத்தில் வைத்து கட்டி வரவும். உள்ளுக்கு வாதநாராயண கீரையைச் சாப்பிடவும்.

கே : 'நோயும் - மருந்தும்' என்ற புத்தகம் (3-4 பாகம்) பக்கம் 79-ல் 200-வது கேள்விக்கு கொடுத்திருக்கும் பதிலில் ஆலம் பழம், ஆல விழுது, கொழுந்து அரைத்து சாப்பிடு முறை எழுதி இருக்கிறீர்கள். தினந்தோறும் செய்வதென்றால் சிரம மாக இருக்கிறது. 60 அல்லது 120 நாட்களுக்கு தேவையான மருந்தை ஒரே நாளில் தயார் செய்துக் கொண்டு அளவுபடி சாப்பிட்டு வரலாமா? விடை தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ப : மூலிகைகளில் பசுமையான பாகங்களை அவ்வப்போது எடுத்து தான் பயன்படுத்த வேண்டும். இதில் பலன் முழுமையாகத்

தெரியும். பச்சை மூலிகை உலர்ந்து போன பிறகு அதன் சக்தி குறைந்து போகும். சில மூலிகைகள் பச்சையாக இருக்கும் போது ஓர் குணமும், உலர்ந்த பின்பு அதற்கு எதிரான குணமும் உண்டாக்கும். எனவே, அவ்வப்போது பசுமையாகவே பயன்படுத்துதல் நன்றாகும்.





கே: வயது 19. என் காதுகளில் அடிக்கடி அழுக்கு சேர்ந்து குத்தல் உண்டாகிறது. தலைவலியும் உண்டாகிறது. கண்ணும் வலிக்கிறது. காதுகளை அவ்வப்பொழுது சுத்தம் செய்துக் கொள்ளும் முறையையும், வலி, குத்தல் நீங்க மருத்துவ முறையையும் கூறவும்.

ப: புளிப்பு பொருள்களை சாப்பிடாமல் இருக்கவும். இதனால் அழுக்கு அதிகமாகச் சேராது. கடல் நுரை என்ற பொருள் நாட்டு மருந்துக் கடைகளில் விற்கும். அதை 50 கிராம் வாங்கி, 50 கிராம் பெருங்காயம் சேர்த்து, 50 மிலி நல்லெண்ணெயுடன் போட்டு பொங்கக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு, இரவில் காதில் விட்டுவர குத்தல், குடைச்சல், தலைவலி, கண்வலி போன்றவைகள் நீங்கிவிடும். விடிந்தவுடன் காதுகளை பஞ்சு கொண்டு நன்றாகச் சுத்தம் செய்து விடுங்கள். வேறு சிகிச்சை இன்றி காது கோளாறு நீங்கிவிடும்.

கே: என் தாயாருக்கு காலில் முள் குத்தி, அந்த இடத்தில் தடிப்பாகவும், குழி விழுந்தாற் போலிருக்கிறது. வலியும் உண்டு. இதற்கொரு எளிய மருத்துவ முறை கூறுங்கள்.

ப: சிறிது உப்பு தூள் செய்து கொண்டு தினமும் அந்த குழிவிழுந்த இடத்தில் வைத்து அடுப்புதட்டின் மேல் காலை வைத்துக் கொண்டிருக்க சுரீர் என்ற உணர்ச்சி உண்டாகும். பிறகு எடுத்து விடவும். இப்படி 5-நாள் செய்துவர அந்த குழிவிழுந்த இடத்தில் தடிப்பானது கரைந்து சமமாக ஆகிவிடும்.

கே: தாய்மார்களுக்கு பிறக்கும் குழந்தை சிவந்த நிறமாக இருக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. இதற்கு ஏதாகிலும் முறை உளதா? குங்குமப்பூவை சர்ப்பிணிகள் சாப்பிட்டு வந்தால் மாத்திரம் போதுமா? பயனுள்ள முறை கூறவும்.

ப: குங்குமப்பூவை கர்ப்பிணிகள் ஏழாம் மாதம் முதல் பாலில் சிறிதளவே போட்டு குடித்து வரவேண்டும். அத்துடன் சீமை அத்திப்பழத்தை தினமும் இரவில் இரண்டு சாப்பிட்டு வர குழந்தை நல்ல சிகப்பு நிறமாகவும், தள தள வென்று அழகாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கே: தமிழ் மருந்துகள் சாப்பிட்டு வருபவருக்கும் உடல் நலத்திற்காக பழங்கள், குடிநீர் வகைகள் சாப்பிட்டு வருபவருக்கும் முறிவு மருந்து அவசியமா? இப்படி முறிவு மருந்து அவசியம் எனில் முறையை தெரிவிக்கவும்.

ப: தமிழ் மருந்துகளில் ரசபாஷாணங்கள் உண்டு. இத்தகைய மருந்து சேர்க்கைகள் உள்ள மருந்துகளைச் சாப்பிடுவோர் முறிவு மருந்து சாப்பிடத்தான் வேண்டும். மற்ற மூலிகை, குடிநீர், பொடி வகைகளைச் சாப்பிடுவோர்கள் காய்ச்சிய நல்லெண்ணெயை தலைக்குத் தேய்த்துக் குளிக்க அதுவே முறிவு ஆகும்.

கே: என் வயது 40. அடிக்கடி கீழ் உதடு வலதுபாகம் துடித்துக் கொண்டிருக்கிறது. இது உடலின் பலவீனத்தைக் காட்டுகிறதா?

ப: உதடு பாகம் துடிப்பது பலவீனம் இல்லை. அது உடலில் உள்ள வாய்வு துடிப்பு. இது அடிக்கடி வரக்கூடாது. துடிவாய்வு

என்பர். வாய்வுக் கோளாறு உள்ள உமது உடம்பை ஒரு சித்த மருத்துவரிடம் நேரில் காட்டி தக்க ஆலோசனை பெறவும். அல்லது நேரில் இங்கு வரவும்.

கே : பல்லில் இரத்தம் கடந்த 6-மாதங்களாக வருகிறது. தாங்கள் கூறியபடி வேப்பங்குச்சியால் பல் துலக்கி வந்தேன். இரத்தம் வருவது நின்றது. ஆனால் ஈறு வலிமை பெறவில்லை. தேய்ந்தவாறே இருக்கிறது. இதற்கும் ஒரு எளிய முறை கூறவும்.

ப : பற்களின் ஈறுகள் கெட்டியான வளர்ச்சி பெற ஆலம் விழுது சிறப்புடையது. நாள் தவறாமல் ஆலம் விழுதைக் கொண்டு பல் துலக்கி வரவும்.

கே : எனக்கு வயது 20 (ஆண்). அடிக்கடி உமிழ்நீரில் இரத்தமாக காணப்படுகிறது. என்ன காரணம் தெரியவில்லை. மூலிகை மணியின் மூலம் தங்கள் விளக்கத்தையும், மருத்துவ முறையையும் அறிய விரும்புகிறேன்.

ப : உமிழ்நீரில் இரத்தம் காணுவது ரத்த பித்தம். நுரையீரல் கல்லீரல் பழுதடைந்த போது நிகழும். எண்ணெய் பொருள்கள் புகைப்பது, மாமிச உணவுகளால் இது அதிகரிக்கும். இந்த இரத்த பித்தம் நிற்க மஞ்சள் கரிசலாங்கண்ணியை தினமும் பச்சையாக 1-மண்டலம் மென்று தின்றுவர உமிழ்நீருடன் சுரக்கும் இரத்தம் நிற்கும்.

மலேசியா & சிங்கப்பூரில்

"மூலிகை மணி"

பூரண விநியோக உரிமை பெற்ற விற்பனையாளர்,

ISMAIL BOOK DEPOT,
G. P. O. Box 149
SINGAPORE.

GETRICH SYNDICATE,
112, Serangoon Road,
SINGAPORE-8.

குறிப்பு :- ஆசிரியர் ஆ. இரா. கண்ணப்பர் எழுதிய மருத்துவ நூல்களும், மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும்.

மருந்து சுத்தி முறைகள்!

* * * * * * * * *

— முன் மாதத் தொடர்ச்சி

60. தான்றிக்காய் :

தாழை விழுதுச் சாற்றில் ஒரு சாமம் ஊறவைத்து, விதையை நீக்கி வெய்யிலில் உலர்த்துக.

61. கடுகு, 62. வெண்கடுகு :

நன்ருய் ஆய்ந்து கடும் வெய்யிலில் இரண்டு நாள் உலர்த்துக.

63. கடுக ரோகிணி :

வேப்பிலைச் சாற்றிலேனும் நொச்சி இலைச்சாற்றிலேனும் ஒரு சாமம் ஊறவைத்து வெய்யிலில் உலர்த்துக.

64. மந்திட்டி, 65. கிச்சிலிக் கிழங்கு :

இவைகளை கடு இரவியில் உலர்த்தி இடித்துக் கொள்க.

66. கற்கடகசிங்கி :

வாதுமை எண்ணெயில் வறுத்துக் கொள்க.

67. அதிமதுரம் :

சுத்த ஜலத்தில் அலம்பி மேல் தோலைச்சீவி சிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்திக் கொள்க.

68. கார்போக அரிசி :

திருநீற்றுப்பச்சிலைச் சாற்றில் நனைத்து உலர்த்துக.

69. வாலுளுவை, 70. சிறு வாலுளுவை :

சோற்றுக் கற்ருழைச் சாற்றில் கழுவி இரவியிலுலர்த்துக.

71. பெருங்காயம் :

இதனை கரி நெருப்பில் பொரித்தேனும், தாமரை இலைச்சாற்றில் ஒரு நாழிகை உலர்த்தியேனும் உபயோகிக்க.

72. சேராங்கொட்டை :

இதனுடைய மூக்கை வெட்டி சமுநீரிலும் எருமைப் பாலிலும் ஒவ்வொரு சாமம் ஊறவைத்து ஜலத்திலலம்பி இரவியிலுலர்த்துக.

73. கங்குட்டம், 74. கெந்தமாஞ்சில் :

இவைகளை கடு இரவியில் ஒரு நாழிகை உலர்த்தி வைத்துக் கொள்க.

75. அரக்கு :

இதனை நறுக்கி உள்ளிருக்கும் குச்சுகளை நீக்கி உபயோகிக்க.

76. தமாலபத்திரி :

இதிலுள்ள பெருநரம்புகளைக் களைந்து இரவியிலுலர்த்துக.

77. கோஷ்டம் :

இதனில் வேறொன்றும் இல்லாமல் ஆய்ந்து இரவியிலுலர்த்துக

78. மெழுகு :

இதனை உருக்கி தெளியவைத்து வடிகட்டிக் கொள்க.

79. குங்கிலியம் :

திரிபலாதி கஷாயத்தில் தோலாந்திரமாகக் கட்டி இரண்டு சாமமெரிக்க. எல்லாவித குங்கிலியங்களையும் இவ்வாறே சுத்தி செய்க.

80. குக்கில் :

வேப்பம்பட்டை, கண்டங்கத்திரி, சீந்தில், கோரைக் கிழங்கு, நிலவேம்பு, ஆடாதொடை, வெண்ணொச்சி, பேய்ப்புடல் இவ்வெட்டினையும் ஒவ்வொருபிடி ஒரு மண்கலத்திலிட்டு ஜலம்விட்டு ஏடுகட்டி அதன்மேல் குக்கிலை வைத்து மேல்சட்டி மூடி 1 சாமம் எரித்தெடுக்க.

81. குந்திரிக்கம் :

சாராயத்தில் ஒரு நாள் ஊறவைத்தெடுக்க.

82. கூகை நீர் :

ஏழு முறை ஜலம் விட்டு கரைத்துக் கழுவித் தெளிந்த பின் வடிகட்டி இரவியிலுலர்த்திக் கொள்க.

83. கஸ்தூரி, 84. கோரோசனை :

இவைகளுக்கு சுத்தி இன்றேனும் இயற்கை சரக்கிற்கும் வைப்பு சரக்கிற்கும் உள்ள வித்தியாசம் அறிந்து சேர்த்தல் நலம்.

85. குங்குமப்பூ :

இதனைக் கடுதாசியின் மேல் பரப்பி நெருப்பனலிற் காட்டி நுறுங்கும் பதத்தில் எடுத்துக் கொள்க.

86. சந்தனம், 87. செஞ்சந்தனம், 88. கருப்புஅகரு

வைரப்பாகத்தை எடுத்துக்கொண்டு ஏனைய பாகத்தை கழித்து விடுக.

89. தூநீயாங்கிசம் (பிசின்) :

இதனை கடும் வெய்யிலில் உலர்த்திக் கொள்க.

90. செவ்வள்ளி :

வெய்யிலில் உலர்த்துக

வன மூலிகைகள்

91. காட்டு மிளகு :

வெற்றிலைச் சாற்றில் அரை நாழிகை ஊறப்போட்டு வெய்யிலில் உலர்த்திக் கொள்க.

92. வால் மிளகு :

காம்புகளை ஆய்ந்து வெய்யிலில் உலர்த்துக.

93. கஸ்தூரி மஞ்சள், 94. அக்கிரகாரம்,

95. பீத ரோகணி, 96. வட்டத்திருப்பி :

இவைகளின் மேல் தோலை சீவி சிறு துண்டுகளாக நறுக்கி வெய்யிலில் உலர்த்துக.

97. பரங்கிச் சக்கை, 98. அமுக்கிராக்கிழங்கு,

99. நிலப்பனங்கிழங்கு, 100. தண்ணீர்விட்டங்கிழங்கு

இவைகளை நன்குயுலர்த்தி தனித்தனி இடித்து சூரணம் செய்து ஒரு புது மண் பாண்டத்தில் பாலை விட்டு சீலையால் ஏடுகட்டி அதில் இச் சூரணத்தை வைத்து மேல்சட்டி மூடி ஒரு சாமம் எரித்த பின் சூரணத்தை எடுத்து வெய்யிலில் உலர்த்தி அரைத்தெடுக்க.

101. மகரப்பூ :

அடிக் காம்பையும் நடுவிலிருக்கும் மகரந்தத்தையும் விலக்கி காயவைத்து எடுத்துக் கொள்க.

102. லவங்கப்பட்டை, 103. லவங்கப்பத்திரி,

104. தக்கோலம், 105. வெட்பாலை அரிசி :

இவைகளை வெய்யிலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

106. சிற்றேலம் :

பொன் வறுவலாக வறுத்துக் கொள்க.

107. புகையிலை :

அகத்திக்கீரையின் மத்தியில் புகையிலையைச் சுருட்டி வைத்து ஜலம் விட்டு எரித்து வெய்யிலில் உலர்த்திக் கொள்க.

108. கெஞ்சா :

விதை, காம்பு முதலியவற்றைப் போக்கி ஓரிரவு சுத்தஜலத்தில் சிறிது சோற்றுப்பு சேர்த்துப் போட்டு அடுத்த நாள் ஏழு முறை பிசைந்து பிசைந்து கழுவி கெட்டி சீலையிற் பிழிந்து, விடுதிகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்திக் கொள்க.

109. இருவி :

இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சிறுநீரில் மூன்று நாள் ஊறப்போட்டு எடுத்து உலர்த்துக.

110. நாவி :

இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கி கோநீரில் மூன்று நாள் ஊறப்போட்டு கோநீரை வடித்து வெய்யிலில் உலர்த்துக.

111. வெட்டிவேர், 112. விளாமிச்சு வேர் :

சிறுதுண்டுகளாக நறுக்கி வெய்யிலில் உலர்த்திக் கொள்க.

113. தேவதாரு, 114. அகில் :

வைர பாகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பொன்வறுவலாக வறுத்து உபயோகிக்க.

115. குரோசானி ஓமம் :

இதனை நன்றாய்த் தேய்த்துப் புடைத்து மண்ணைப் போக்கி உலர்த்திக் கொள்க.

116. வாளம் :

எருமைச்சாணியில் வேகவைத் தெடுத்தலம்பி ஒவ்வொன்றையும் பிளந்து, தோலை நீக்கி, நஞ்சென்னும் முளையையும் நீக்கி, தளர்ச்சியாக மெல்லிய சீலையில் முடிந்து பச்சரிசியுடன் சேர்த்து பொங்கி அரிசி வெந்ததும், அம் முடிச்சியை எடுத்தலம்பி மறுபடியும் முன்போல் முடிச்சு கட்டி பாலிலெரித்துக் கழுவி, நிழலிலுலர்த்தி ஒரு சட்டியில் கொஞ்சம் சிற்றுமணக்கெண்ணை தடவி அதில் போட்டு வறுத்தெடுத்துக் கொள்க.

117. சிவதை வேர் :

இதனடுவில் இருக்கும் நரம்புகளைக் களைந்து பாலில் போட்டு அடி காந்தாமல் வேகவைத் தெடுத்து வெய்யிலில் உலர்த்துக.

118. நாகணம் :

இதனை வில்லை வில்லையாக அறுத்து ஒரு சட்டியில் நெய் தடவி அதனில் போட்டு வில்லைகள் வளையும்படி வறுத்தெடுத்துக் கொள்க.

119. சீந்தில் :

இதன் மேல்தோலைச் சீவிக் கழித்துக் கொள்க.

120. சமுத்திரச் சோழி விதை :

ஓடு நீக்கி உள் பருப்பை எடுத்துக் கொள்க.

(தொடரும்)

மூலிகை மணி சந்தா விபரம்

தனி இதழ்	ரூ. 0—50	மூவாண்டு சந்தா	ரூ. 18—00
ஆண்டு சந்தா	6—00	ஆயுள் சந்தா	150—00

மூவாண்டு சந்தா ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு எமது வெளியீடுகளில் ஏதேனுமொன்று இலவசமாகத் தரப்படும். ஆயுள் சந்தா செலுத்தினால், எமது வெளியீடுகள் அனைத்தும் அன்பளிப்பாகத் தரப்படும்.

The Fundamental Principles of Kalpa System of Medicine

[Dr. A. SHANMUGAVELAN, MADRAS.]

So far as is known the Siddha system of medicine is regarded as the most unique system especially in the preparation of Kalpa drugs. One may wonder what is the remarkable thing in the Siddha system that is capable of curing many chronic and degenerative diseases. It may surprise one to know that the fundamental principles of Siddha system are not to be found in any other medical systems of the world.

Siddhars knowledge of minerals, metals and plants and the suitable combination of these things in the processing and the preparation of medicine according to the classification of five elements of nature, was of a very high order as can be gleaned from the lines of the ancient Siddha medical works. Their knowledge about poisons was also very comprehensive as can be seen from the descriptions of the properties of the poisons in the Siddha Materia medica. These poisons are divided into two kinds - natural and synthetic, each of which is subdivided further into 32 numbers making up a total of 64 varieties. There are different kinds of manufacturing processes mentioned like calcination of metals and minerals, extracts and essences from minerals, calcinated powders like red oxide, preparation of caustic alkali from the plants etc. with a high potency. The process of distilling several kinds of acids in Siddha system is regarded as the most important one in using them as powerful solvents. In the process of manufacturing pharmaceuticals, according to Siddha methods, one must have a comprehensive knowledge of the several classifications of the drugs as regards their character and the five elements of the nature and their further classification into friendly and unfriendly drugs in theory as well as in practice so as to achieve successful results. There is no denying the fact that the fundamental principle underlying the process of calcination of the metals and the minerals successfully eliminating their evil effects but not loosing at the same time their beneficial ones is a great secret ; but the difficulty is that one has to learn the secret manufacturing the Siddhic medicines from a learned and experienced Guru, since the correct scientific terminology of the

different kinds of formulae relating to kalpa drugs as given in the ancient Siddha texts are not only fully comprehensive and expressive but also shrouded in symbolic words.

The secrets of preparing Siddhic medicines lie in the fact that substances like mercury, sulphur, arsenic etc. which are volatile in nature are rendered as non-volatile quintessences when stirred over fire by a unique process adopted by the Siddhars in Tamil Nad. It means that this kind of mercury is deprived of its poisonous physical properties and its metalic lustre. A great virtue is attributed to this kind of purified mercury. It would be served as kalpa drug to rejuvenate one's system. What is the test for a kalpa drug of mineral origin that is capable of rejuvenating the system? If it is genuine kalpa drug, it would have such a marvellous and powerful action as to transmute a base metal like copper into gold. The transmutation of base metals into gold was but a secondary aim of the Siddhas.

The Siddha system of Alchemy considers the turning of base metals into gold as a lower form of alchemy, but the elevation of man to attain the higher eternal bliss for ever is regarded as the highest form of alchemy. A man who falls down dead as a corpse is no Siddha. Man, according to Tirumular, is comparable to * copper, the essential attribute of which is green patina (impurities). Similarly, egoism is a basic attribute of the soul, the removal of which makes a man a perfect immortal (gold), which should always be the aim of the man to achieve a level as to know the Supreme Creator. This is the higher form of alchemy contemplated by Siddhas with the help of the five mystic letters as mantra.

Therefore, it must be noted carefully here that the Siddha kalpa drugs are based on alchemical processes — processes which can transmute the base metal into gold. As this noble art of alchemy is intended only for attaining salvation, it should not be indiscriminately broadcast to all or be practised by all for material gains or advantages. Siddhars therefore feund it necessary to veil the alchemical formulae relating to kalpa drugs in figurative language

* 'சிவாய நம என்ன செம்பு பொன்னாகும்'. — திருமூலர்.

It is also said that this devine art would be instructed by the Supreme Guru to only a very few who were deemed by him to be devoted and trustworthy disciples after several servere ordeals for a great number of years.

The author has read for purposes of comparing the different parts of the magnum opus written by several siddhas-among them, one describes the drugs, another their curative aspects, a third the method of preparation, a fourth the spiritual attainment, a fifth detailing certain rare herbs the names of which are not to be easily identified. But none of their texts gives us a complete picture of the Kalpa treatment. Moreover, these alchemical processes are shrouded in symbolism as different authors give different interpretations. It is therefore said that no fruitful result would be achived in pursuing the alchemical processes as described in ancient Siddha manuscripts relating to Kalpa drugs.

— (to be continued)

மூலிகை ரட்சை

வாழ்க்கையில் ஏற்படும் பலவிதமான வேதனை, தீராப் பிணிகள், எதிரிகளின் தொல்லை, நவக்கிரகபீடைகளால் வறுமை, காரிய தாமதம், அமைதியின்மை, சந்ததி தடை, திருமணங்கள் தடை, வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியாதபடி எதிரிகள் செய்யும் மாந்திரீகம், பில்லி, ஏவல், சூன்யம் போன்றவைகளால் தொல்லை, இத்தியாதி போன்ற தீய சக்திகளை ஒழித்துவிடுவது ‘ மூலிகை ரட்சை ’ ஒன்றே !

இவ்வகையில் பல்லாண்டுகளாக அரும்பாடு பட்டு ஆராய்ச்சி செய்து மூலிகைகளின் மூலங்களை திருமுருகன் உபாசனையால் சாபநிவர்த்தி செய்து, பிரத்தியேக பூசையில் வைத்து, தேவையுள்ள அன்பர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதன் பேரில் அன்பும், நம்பிக்கையும் உள்ளவர்கள் 25-காசு தபால் தலையுடன் எழுதினால் இதன் முழு விவரமும் தெரிவிக்கப்படும்.

சந்தா அன்பர்களுக்கு மட்டும்

எமது தயாரிப்புகள்:

கற்பக மிளகுப் பொடி

குழந்தைகளுக்கு வரும் எவ்விதமான நோய்களுக்கும் குறிப்பாக மாந்தை, இழுப்பு, இளைப்பு, இருமல், கபக்காய்ச்சல்களுக்கு ஏற்றது.

ஒரு பாக்கெட் விலை ரூ. 3—00

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

கருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலைமுடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் 1 முறை சாப்பிடலாம் குழந்தை முதல் பெரியோர் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரூ. 2—50

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபகமறதி, வழுக்கைத்தலை, அதிகஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

முசுமுசுக்கை தைலம்

தலைக்கு தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகாலரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காசநோயுடையவர்களுக்கு ஏற்றது

ஒரு புட்டி விலை ரூ. 4—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும் பல்லுறுதிக்கும், பல்தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை 0—30 காசு.

காது நோய் எண்ணை

காதில் சீழ்வடிதல், இரத்தம் வருதல், காதுவலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 2—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி, கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாக தேறலாம்.

40–நாள் மருந்து பாக்கெட் விலை ரூ. 3-50

நேத்திரப் பூண்டு தைலம்

96-வித கண் கோளாறுகளுக்கும் (பார்வை மங்கல், சதை வளர்தல், சாலேச்ரம்) சிறுவர் முதல் பெரியோர் வரை உபயோகிக்கலாம்.

ஒரு புட்டி விலை ரூ. 7-50

மகா மூலிகை எண்ணெய்

காலில் ஆணி, தோலைப் பற்றிய நோய்கள், வெண்குட்டம், உடலில் அசுத்த நீர் தேக்கம், ஊளைச்சதை, சர்மநோய்கள் தீரும்.

ஒரு புட்டி விலை ரூ. 25-00

தலைவலி மாத்திரை

எந்தவிதமான தலைவலி வந்தபோதிலும் ஒரு மாத்திரையை சுடுநீரில் உரைத்து தலைக்குப் பற்று போட்டுவிட வலியெல்லாம் குறைந்து நீர்குற்றம் முதல் எல்லா வலிகளையும் அறவே போக்கும். சித்தர் இலகு மருத்துவத்தில் இம்முறை கூறப்பட்டுள்ளது.

25 மாத்திரை விலை ரூ. 2-50

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணி கீரையால் முறைப்படி தயாரித்தது. கண் ஒளிக்கும் பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னாமாகவும், தினம் தடவிக்கொள்ளவும் ஏற்றது. 1 புட்டி விலை ரூ. 4-00

தாளிச கலவைப் பொடி

பழங்கால முறைப்படி தயாரித்தது. சாதாரண காய்ச்சல் முதல் எந்தவிதமான நோய்களுக்கும், குழந்தை முதல் பெரியோர் வரையில் தேன், நெய், வெண்ணை, வெந்நீர் போன்ற அனுபானங்களில் கலந்து பயன்படுத்தலாம். 1 பாக்கெட் விலை ரூ. 3-00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு இத்துடன் தபால் சிலவு ரூ. 2—05 சேர்த்து கீழ்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3–05ம் 4 (அ) 5 புட்டிகளுக்கு ரூ. 4-05ம் தபால்சிலவு சேர்த்து அனுப்பவும்.

மணியார்டர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் கவனிக்க இயலாது.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.**

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

புகைப் பிடித்தல் பற்றிய ஆய்வுத் தொடர் கட்டுரை:

இழுக்க... இழுக்க?

[க. வெங்கடேசன், B. Sc.,]

— ஐப்பசி மாதத் தொடர்ச்சி

> ஆங்கிலேயன் விட்டுச் சென்ற பல்வேறு தீமைகளில் ஒன்று புகைப் பழக்கம். அதிலும் சிகரெட் பழக்கம் நம் நாட்டு இயற்கைச் சூழலுக்கு ஒரு சாபக்கேடாக வந்து சேர்ந்தது. மிகவும் எளிய கிராமத்தில் கூட இன்று இளம் வயதினரிடையே சிகரெட் பழக்கம் பரவி, அவர்களின் அறிவு, உடல் வளர்ச்சியைக் கெடுத்து வருகிறது வருந்தத் தக்க செய்தியாகும். சிகரெட் பழக்கத்தால், காலமும், உடல் நலமும், பொருளும் தான் இழக்க நேரிடுகிறது. சிகரெட்டுகளை தயாரிக்கும் நான்கைந்து சிகரெட் கம்பெனி முதலாளிகட்குத் தவிர, சிகரெட்டால் யாருக்கும் இலாபமில்லை.
>
> — பண்டித மதன்மோகன் மாளவியா.

புகைப் பிடிப்பது தீய பழக்கமா?

என்று இன்றைய 'நியூவேவ்' மக்கள் மட்டுமல்ல, இந்த பழக்கத்திற்கு 'எப்படியோ' அடிமையாகிவிட்ட 'பழைய பஞ்சாங்கங்கள்' கூட கேட்கக் கூடும். ஆங்கிலேயன் அ[illegible]ரித்த நன்கொடையில் அன்றே மூக்கி மூழ்கிவிட்ட இந்த 'பழைய[illegible]சாங்கங்கள்' புகைப் பிடிப்பது தீய பழக்கமல்ல! எனக் கருதி [illegible]ந் தாமே ஏமாற்றிக் கொண்டு வருவதுடன், இளைய சமுதாயத்[illegible] கெடுத்து வருகின்றனர். "உலகே மாயம்; வாழ்வே மா[illegible]ன்று மாயாவாதம் புரிபவர்களுக்கு சிகரெட் பிடிப்பது மட்டும[illegible]னும் சமுதாயம் எதைத் தீமை என்று கூறுகிறதோ அவை [illegible]டட தீய பழக்கமாக இருக்காது. நமக்கு அவர்களைப் ப[illegible]ண்டாம்.

"நம் குடும்பம் நன்றாக நோயற்று வாழவேண்டும். நம்மை நம்பி இருப்போர்க்கு நாம் நல்லதொரு வழிகாட்டியாக இருக்க வேண்டும். ஒழுக்கமும், தூய்மையும் தான் மனித வாழ்வினை மேன்மையுறச் செய்யும்" என்று நம்பும் மனிதர்கள் நிச்சயமாக சிகரெட் பழக்கம் தீய பழக்கம் என்று சத்தியமாகக் கூறுவார்கள். கூறியுள்ளார்கள்.

"புகைப் பிடிக்கும் பலதிறத்தவர்களை நான் கண்டு வேதனைப் படுகிறேன். இத் தீய பழக்கத்தினை அன்புகூர்ந்து கைவிடுங்கள் என்று வேண்டினேன். அவர்கள் "அந்தப் பழக்கத்தினைக் கைவிடுவது இயலாத காரியம்" என்று கூறு கிறார்கள். கேடு கெட்ட புகைப் பழக்கத்தால் வரும் மகிழ்ச்சி யையும், பயனையும் என்றால் புரிந்துக் கொள்ளமுடியவில்லை" என்று 1527-ம் ஆண்டில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர் மனம்நொந்து வெந்து கூறுகின்றார்.

"தீ பற்றியுள்ள ஒரு குச்சியையும், ரொட்டித் துண்டினை யும், ஒரு குழந்தையின் முன்னர் வைத்தால், அந்த குழந்தை தீ பற்றி எரியும் நெருப்புக் குச்சியை எடுத்துக் கையைச் சுட்டுக் கொண்டு வேதனைப் படும். அது போல், இந்த 'சிகரெட் உலகம்' உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை தரும் நல்ல பழக்கங்களை ஒதுக்கி விட்டு, புகைப் பழக்கத்தினை தேர்ந்தெடுத்து தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றது" என்று திரு போல்ட் என்னும் அறிஞர் சிகரெட்பிடிப்பது சிறுபிள்ளைத் தனம் என்று சாடுகின்றார்.

"For slaves, smoking is like a dose of opium which makes them unfit to move, a ct, or struggle." என்று கண்டனக் குரல் கொடுக்கின்றார், லால ஜபதி ராய்.

"Smoking is demic which has spread throughout the world like wild fire eaves its victims to suffer for life. Many basic necessities are sacrified at the alter of smoking. It is a curse on " என்று மனம் புழுங்கிக் கூறினார் டாக்டர் இராசேந்திர பி

[இந்த படத்தைப் பாருங்கள். புகைப் பிடித்த காரணத்தால் தொண்டையில் புற்று நோய் வந்து, தொண்டையை அறுவை சிகிச்சை செய்து விட்டனர். டாக்டர் புற்றுநோயை அறுத்தெறிந்தார். ஆனால் இந்த அன்பரால் புகைப் பழக்கத்தை அறுத்தெறிய முடியவில்லை. உணவுக் குழாயில் துளையிட்டு அதன் வழியாக ஒரு சிகரெட் குழாயின் மூலம் "இன்பம் தரும் புகையை இழுப்பதைப் பாருங்கள்." பார்த்து விட்டு விடாதீர்கள்! நாளைக்கு உங்களுக்கும் இந்த நிலை வரக்கூடும். இந்த படத்தை எப்போதும் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளுங்கள். சிகரெட் பிடிக்கும் பழக்கம், இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல; எந்த ஜென்மத்திலும் வரவே வராது]

"சிகரெட் பிராணி"

"ஆமை புகுந்த வீடு" என்றொரு பழமொழி தான் சிகரெட் பற்றி நினைத்தவுடன் என் நினைவுக்கு வருகிறது. ஆமை புகுந்த

வீட்டில் எங்ஙனம் நல்லவை இருக்காதோ, அது போல, சிகரெட் பழக்கம் ஒன்று நல்லவன் ஒருவனைப் பிடித்து விட்டால், அடுத்து குடிப்பழக்கம், இன்னும் பெயர் சொல்ல முடியாத பழக்கங்கள் அழைப்பின்றி வந்து, அன்பையும் நல்ல பண்புகளையும் வெளியேற்று வதுடன், நல்ல சுபாவத்தையே அடியோடு மாற்றி எப்போதும் 'சிடு, சிடு' என எரிந்து விழுதல், சிறு விஷயங்களுக்குக் கூட பெரிதாகக் கோபமடைந்து, தாறுமாறாக நடத்தல், மித மிஞ்சிய அச்சம், நரம்புகள் தளர்வுற்று சோம்போறித் தன்மை அடைந்து எதிலும் ஆர்வமின்றி, மனிதனாகவே காட்சியளிக்காது ஒரு 'சிகரெட் பிராணி'யாகத் தோன்றச் செய்யும்.

அடிமை வாழ்வுக்கு வழி திறப்பது சிகரெட்

ஆங்கிலேயன் நம்மை அடிமைப் படுத்திய வரலாற்றினை ஒரு போக்காகப் படித்தால், அவன் அடிமைப்படுத்தப் பயன்படுத்திய கருவிப் பட்டியலில் முக்கிய இடம் பிடிப்பவை மது ரகங்கள், கவர்ச்சி மிக்க சிகரெட் ஆகியனவாகும். இந்த இரண்டையும் நவாபுகட்கும், மாஜி மன்னர்கட்கும் பரிசாக அளித்து, அவர்கள் மயங்கி இருந்த வேளையில் அரசாட்சியைக் கைப்பற்றிய வரலாறு ஏராளம் உண்டு. கட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்த எட்டப்பனின் மூளையை மழுங்க வைத்தவை மதுவும் சிகரெட்டும் என்றால் யாரே மறுக்க வல்லார். எனவே, அடிமை வரலாற்றில் ஆங்கிலேயருக்குப் பெரிதும் உதவி யவை மதுவும், சிகரெட்டும். இத்தகைய சிகரெட் வெள்ளையன் வெளியேறியும், இன்னும் நம் நாட்டு மக்களின் மனதிலிருந்து வெளி யேறவில்லை. எட்டாமிடத்துச் சனியன் பிடித்தால் ஏழரை ஆண்டு கள் தான் தொல்லைகள் இருக்கும். சிகரெட் சனியன் பிடித்தால் உயிரை அழிக்கும் வரை விடாது என்பதை சிகரெட் பிடிப்பவர்கள் உணர்ந்தால், அடுத்த நிமிடமே அதனை விட்டு விடுவார்கள்.

சிகரெட் புகை உடலில் ஏற்படுத்தும் அபாயமான மாற்றங்கள்

◎ *சிகரெட் புகை உடலில் படிய படிய உதடுகள் கறுத்தும் வெளுத்தும் விகாரமாகத் தோன்றும். பற்களில் மஞ்சளாகக் கரை படியும். கூடிய விரைவில் பற்கள் விழுந்து விட்டாலும் வியப்படைய வேண்டியதில்லை.*

◎ *மாமிசம் உண்பவர்கள், சிகரெட் பிடித்தால், பல்வலி ஏற்பட்டு மரண வேதனை உண்டாகும்.*

◎ மது அருந்துபவர்கள் சிகரெட் பிடித்தால் தொண்டையில் புற்றுநோய் ஏற்படும்.

◎ கண்களில் கலக்கம் உண்டாகி கவர்ச்சி அழியும். எப்போதும் சிவப்பாக காட்சி அளிக்கும்.

◎ நாடித் துடிப்பை அதிகரித்து, உச்ச இரத்த அழுத்தத்தினை உண்டாக்கும்.

◎ வேகமாக எந்த செயலையும் செய்ய இயலாது. முயற்சிகள் குன்றி அயற்சிகள் அதிகப்படும்.

◎ சுய சிந்தனை மறைந்து பிறர் அறிவையே சார்ந்து இயங்கும் அடிமை எண்ணமாகிய தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும்.

◎ மூக்கு வாசனையை துல்லியமாக அறிய முடியாது. நாக்கு ருசுயை நுட்பமாக உணராது. கண்கள் தொலைநோக்கு பார்வையை இழக்கும். வாய் நாற்றமடித்து கறுத்து, தன் இயல்பை இழக்கும்.

◎ மெய் உணர்ச்சி மரத்துப் போய் விடும். காது கேட்பது மங்கி எப்போதும் இரயில் கூவும் ஒலிபோல் 'ஙொய்' என்ற ஓசை இருந்து கொண்டே இருக்கும்.

இவைகளை யெல்லாம் அலட்சியமாகக் கருதி, மேலும் புகைப்பீர்களானுல்,

நுரையீரல், இதயம், இரைப்பை, மூளை

ஆகிய அரச உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு, முடிவில்

"நம்பியவர்களை நட்டாற்றில் விட்டு விட்டு - நாலு பேருக்கு நன்றி"

என்ற பாட்டிற்கேற்ப சிவலோக பதவியையோ, வைகுந்த பதவியையோ அடைய வேண்டியது தான்.



இந்த படத்தினைக் கூர்மையாக பாருங்கள். நம் இறைவன் வாழக்கூடிய இதயத்தின் படம் தான்.

மேலே உள்ள இரண்டு படங்கள் புகைப் பிடிப்பதற்கு முன் இயல்பாக உள்ள இரத்த நாளங்கள். இந்த இரத்த நாளங்களிடையே பெரியதொரு துளை இருப்பது இயல்பாக அமைந்ததாகும்.

கீழே வலதுபக்க படம்: இடைவிடாத புகையால் இரத்த நாளங்கள் பாதிக்கப்பட்டு சுவர்கள் இறுகி துளை குறுகி விட்டது.

கீழே இடதுபக்க படம்: சதைகள் வளர்ந்து இரத்தநாளங்கள் ஒன்றி துளை மூடிவிட்டது. இதன் பலன் என்ன தெரியுமா?

இறைவன் வாழவேண்டிய இதய பீடத்தில்
இதய நோய்கள் இடம் பிடிக்கும்;
இறுதியில், நம்மை
இடுகாட்டில் கொண்டு போய் சேர்க்கும்!

(தொடரும்)

சிந்தனைத் தேன்!

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

✳ பொய்ப் பொருளாகிய பொன்மீதும், மண்மீதும், பெண் மீதும் வைத்துள்ள ஆர்வத்தில் இலட்சத்தில் ஒரு கூறுவது இறைவன் மீது வைக்கிறோமில்லை. இங்ஙனமிருப்பின் எங்ஙனே கதி காண்பது?

✳ மெய்ப்பொருளை நாடிய வள்ளுவரும், நால்வரும், பன்னிரு வரும், அருணகிரிநாதரும், தாயுமானுரும் இன்று அமரத்துவம் பெற்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் உலவி வருகின்றனர் உலகுக்கு இன்றும் நின்று அவர்களுடைய ஞானவாக்குகள் வழிகாட்டுகின்றன.

✳ இந்த வீடு நம்முடையது என்கின்றோம். இதற்கு முன் எத்தனையோபேர் அதனை என்னுடையது என்னுடையது என்று கூறினுர்கள். நமக்குப் பின்னர் பலர் அவ்வாறு கூற இருக் கின்றுர்கள். இந்த உலகங்கள் யாவும் இறைவனுடையவை. எல்லாவற்றையும் உடையவராதலின் இறைவனுக்கு உடைய வர் என்ற பேருண்டு. எல்லாம் அவருடைய உடைமை! "உடையானே" என்கின்றுர் மணிவாசகர்.

✳ மனிதனுடைய நற்குணங்களில் தனிசிறந்து விளங்குவது அடக்கம் என்பது. கல்வி, கேள்வி, செல்வம், குலம், பட்டம், பதவி முதலிய பல இருப்பினும் அடக்கம் என்ற ஒன்று இல்லை யானுல், அவன் சிறப்படையான். ஒரு குழம்பில் புளி, மிளகு காயம், காரம் என்பன பல இருப்பினும் உப்பு என்ற ஒன்று இல்லையானுல் உண்பதற்கு உகந்ததாக ஆகாது. உணவுக்கு உப்பு இன்றியமையாதது போல் வாழ்வுக்கு அடக்கம் இன்றி யமையாதது.

✳ அறிவு உயர உயர அடக்கம் மிகுதியாக வேண்டும் அடக்கம் அறிவின் மிகுதியைத் தெரிவிக்கின்ற ஓர் அடையாளம் சாரமும் ஈரமும் இல்லாத உலர்ந்த ஓலை சல சல என்று ஒலிக் கின்றது. பச்சோலை ஒலிப்பதில்லை, அன்றியும் வெண்கல மணி அதிகமாக ஒலிக்கும், தங்கமணி ஒலிப்பதில்லை. அதனுல் பச்சோலைக்கும் தங்கமணிக்கும் பெருமை தானே.

உ
முருகா.

தலை முதல் கால் வரை!

— முன் மாதத் தொடர்ச்சி

முன்பு நீங்கள் சுவாசக் குழல் பற்றியும் அதற்கு வரும் நோய்களும், நோய்த் தடுப்பு முறைகளையும் அறிந்துக் கொண்டீர்கள். நோய் வரும் முன்பு காப்பதே சிறப்பான மருத்துவம். இம் முறை மற்றைய மருத்துவர்கள் கையாளுவதாக ஆதாரம் கிடையாது. ஆனால் சித்த மருத்துவ முறையில் நோய் வருமுன்பு காப்பதே சிறப்பு என்பதை உணர்ந்த சித்தர்கள் தடுப்பு முறைகளைக் குழந்தை முதல் பெரியோர் வரையில் பயன்படுத்தும் முறைகளைக் கூறி அருளினார்கள்.

இந்த சுவாசக்குழல் தாபித நோய்கள் வந்த பின்பு தடுப்பு முறைகள் பயன் தராது. எனவே பரம்பரையாகவே தொடர்ந்து மருத்துவம் செய்யும கிராம மருத்துவர்களிடம் சென்று அவர்கள் தேர்வு செய்து கொடுக்கும் வீர்யமுள்ள பற்ப செந்தூரங்கள், இளகல் (லேகிய வகைகள்) முதலானவற்றை அவர்கள் கூறும் பத்திய பரிகாரமுடன் 1 மண்டலம், 2 மண்டலம் சாப்பிட்டு நோயைக் குணப்படுத்திக் கொள்வது சிறப்பு. இஃதன்றி சுவாசக்குழல் தாபித நோய்களுக்கு நவீன ஆங்கில மருத்துவ முறைப்படி ஊசி, மாத்திரைகளை நம்பி அவைகளைப் பின்பற்றி நோயைப் பின்னும் சிக்கலாக்கி அந்த நோய்களுக்குப் புதிய புதிய பெயர்களை வைத்துக் கொண்டு நோயைக் கலையாகவே வளர்த்துக்கொள்வது மதியீனச் செய்கையே ஆகும். இது அவர்களின் முற்பிறவியின் தொடர்பால் வரும் கேடு பாடுகள் என்றால் அது மிகையாகாது.

நுரையீரல்கள்

சுவாசக் குழல்களுக்குச் சற்று கீழே இறங்கினால் அந்த சுவாசக் குழல் கிளைகள் பக்கத்துக்கு ஒன்றாகப் பிரிந்து நுரையீரல் என்னும் புப்புசங்களில் சென்று முடிவடைகின்றது. இந்த புப்புசம் என்னும் நுரையீரல்களில் தான் நாம் சுவாசிக்கும் காற்றுப் போய்

அந்த நுரையீரல்களில் உள்ள நுண்ணறைகளில் ஊடே பாய்ந்து நாளங்களிலிருந்து வரும் அசுத்த ரத்தத்தை சுத்தப்படுத்தி சுத்த மான ரத்தமாக ஆக்கி மீண்டும் உடலுக்கு அனுப்ப நாடி என்னும் நரம்பு வழியே இதயத்திற்கு அனுப்புகிறது. இப்படி அனுப்பும் தொழில் சரிவர இயங்காமல் அந்த நுண்ணறைகளில் கபம் என்ற சளி சேர்ந்து தடை செய்யும் போது தான் ஆஸ்துமா, சுவாசகாசம் போன்ற நோய்கள் உண்டாகி மூச்சு தடைபடுகின்றது.

பக்கத்திற்கொன்றுக இருக்கும் இந்த நுரையீரல்கள் வெளிர்நிற ரோஜா நிறத்தையொத்து இருக்கும். ஒவ்வொரு நுரையீரல்களும் மூன்று பகுதியுடையவைகளாகி மேல் பகுதி, நடுபகுதி, கடைப் பகுதி யாகப் பிரிந்து யாவும் ஒன்றுக மார்பகத்தினுள் மூச்சு விடும்போது சிறியதாகச் சுருங்கி, மூச்சு எடுக்கும் போது விரிந்து பெருத்தும் இயங்கும் சக்தியை உடையதாக இருக்கும். இந்த விரிந்து சுருங்கும் சக்திக்கு ஏற்ப விலா எலும்பும் பழுவெலும்புகளும் விரிந்து சுருங்கும். விரிந்து சுருங்கும் சக்தி எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கும் மனித உடம்பு நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் என்பதை திடமாக நம்பலாம். இந்த பழுவெலும்புகளுக்கும் நுரை யீரல்களுக்கும் நடுவே சளியூறும் சவ்வுகள் இருந்து நுரையீரல்கட்கு நோய் தடுப்பு சக்தியை அளிக்கும்.

நோய் பற்றியவர்களின் இந்த சளியூறும் சவ்வுகள் தடிப்பேறி நீர் கோர்த்துக் கொண்டால் பழுவெலும்புகள் சரியாக சுருங்கி விரியாது. இந்த சவ்வுகளில் உள்ள நீர் சிறிது சிறிதாக நுரையீர லுக்குச் சென்று இரத்த ஓட்டத்தை தடை செய்து அந்த நுண்ணறை களில் சென்று கடினத் தன்மையாகி நுரையீரலுக்கு சுருங்க பெருகச் செய்யும் இயக்கத்தைத் தடை செய்வதால் சுவாசிக்கும் காற்று கடைசி நுண்ணறைகளைச் சென்று முடிவடையாமல் பாதியிலேயே இரத்தத்தைச் சுத்தி செய்யாமல் திரும்பிவிடும்.

உள்ளே சென்றக் காற்று பிராணவாய்வுடன் செல்கிறது. அது இரத்தத்தைச் சுத்தி செய்தவுடன் கரிமிலவாயுவைத் தாங்கி வெளிவரும் இப்படி கரிமிலவாயு வெளி வருவது மிக மிக சொற்ப மாகவே இருப்பதால் சுவாசத்தில் ஓர் வித தடை ஏற்பட்டு மூச்சுத் திணறல், முட்டல், திக்குமுக்காடல் போன்ற கஷ்டநிலை உண்டாகும். இதுவே ஆஸ்துமா, இரைப்பு, கஷ்டசுவாசம், சுவாசகாசம் என்றெல் லாம் கூறுவார்கள்.

நுரையீரல்கள் நமது சுவாசத்தை எடுத்துக் கொண்டு மனித உடப்புக்கு மிக முக்கியமான இரத்தத்தைச் சுத்தி செய்யும் ஒரு

முக்கிய நிலையமாகத் திகழ்கிறது இதில் ஏற்படும் தடைகளை உடனுக்குடன் கவனித்து இந்த நிலையத்தைச் சரிசெய்து கொள்ளாவிடில் மனித உடம்பு மிக விரைவில் அழிந்து போகும் என்பதில் ஐயமில்லை. எனவே எந்த நோயை நாம் அசட்டை செய்தாலும் நுரையீரலில் தடை ஏற்பட்ட பிறகும் வாளாயிருத்தல் கூடாது.

புகைப் பிடிப்பது

நுரையீரல் நோயாளர்கள் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது இது புகை போடுவதோ அல்லது பொடியை மூக்கால் இழுப்பதோ அறவே கூடாது. சுத்தமான காற்றைச் சுவாசித்து, அது நுரையீரலால் உறிஞ்சி இரத்தத்தை சுத்தி செய்யாமலே பிராண வாயுவை திருப்பி அனுப்பும் போது இந்த பிராண வாயுவுடன் புகையிலையின் புகை அல்லது பொடியும் உள்ளே இழுத்தால் என்ன ஆகும்? எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றினது போல உடம்பு விரைவில் அழிந்து விடும். எனவே இதை நுரையீரல் நோய்ப் பற்றினவர்கள் கவனத்திற்கு கொண்டு வருவது இன்றியமையாத கடமையாகும்.

(தொடரும்)

மகா மூலிகை எண்ணெ!

- காலில் ஆணி,
- தோலைப்பற்றிய நோய்கள்,
- வெண்குட்டம்,
- உடலில் அசுத்தநீர்த் தேக்கம்,
- ஊளைச் சதை,

போன்ற கொடிய நோய்களை வேருடன் களைய மேற்கண்ட "மகா மூலிகை எண்ணெ" யை பத்தியமுடன் சாப்பிட ஆச்சர்யமடையும் வகையில் குணமாகும். மேக நோய்கள் உடையவர்களுக்கு இந்த எண்ணெ ஓர் சிறந்த நிவாரணியாகும். ஷை எண்ணெயை பெற விரும்புவோர், 25-காசு தபால் தலையுடன் எழுதவும்.

மஞ்சள் !

ஓர் நோய்த் தடுப்பு மூலிகை

— வி. பலராமய்யா, அரும்பாக்கம், சென்னை.

நடமாடும் திருக்கோயிலான மனிதன் நீடுவாழ்ந்து காயசித்தி பெற்று உய்ய வழி தேடியவர்கள் சித்தர்கள். அதற்கு என்னென்ன சாதனைகள் கையாள வேண்டுமோ அத்தனையும் தெய்வீக வழிபாட்டில் புகுத்திவிட்டனர் மனிதன் உள்ளிருக்கும் சொரூபத்தை எப்படி கோயிலின் வாயிலாக மூர்த்திகள் அமைத்து சடரூபமாகக் காட்டினார்களோ அதைப்போலவே உடல் வளர்க்கும் மூலிகைகளை தெய்வ வழிபாடுகளில் அமைத்து விட்டனர். அதன் காரணமாகவே துளசி, வில்வம், வேப்பிலை, அருகம்புல் முதலிய மூலிகைகளை தெய்வ மூலிகைகளாகக் கொண்டாடுகின்றனர்.

ஆகவே மஞ்சள் என்னும் மூலிகையை சடரூபமாக பல விதங்களில் தெய்வீகத்தில் புகுத்தி மனிதன் அதை மறவாமலிருக்க வழி வகுத்தனர்.

மனிதன் உடலிலுள்ள உயிரணுக்கள் (cells) அழுகிவிடுவதால் பலவித நோய்கள் சம்வித்து உயிர் போய்விடுகிறது என்று எல்லா மருத்துவ முறைகளும் சொல்கின்றன. அணுக்கள் அழுகா வண்ணமும், உடலின் புறத்திலுள்ள தீய அணுக்கள் உள்ளே புகுந்து நாசத்தை விளைவிக்காமலிருக்கக் கூடிய பொருள்களில் தலைசிறந்த மூலிகை மஞ்சளே.

இதற்கு ஆதாரம் நாம் வெகு தூரம் போய் தேடவேண்டியதில்லை. நம் வீட்டு ஊறுகாய் பானையுள் உற்றுநோக்கினால் போதும். உப்பும், மஞ்சளும் சேர்ந்தாலொழிய எந்த ஊறுகாயும் பூர்ணம் பூக்காமல் இராது. பூசரம் பிடிக்கிறதென்பது வெளியிலுள்ள சீவ அணுக்கள் அதனுள் புகுந்து மனிதன் உணவுப் பொருள்களை உணவாகக் கொள்கிறது. ஆகவே எந்த பொருளாயினும் சரி! அது அழுகலில்லாமலிருக்க மஞ்சளையும் உப்பையும் சேர்க்கவேண்டும்.

மஞ்சள் ஓர் கற்ப மூலிகையென்பது தெரியாமலே நாம் பாரம்பரையாய் நம் வீட்டு சமையலில் உபயோகித்து வருகிறோம். ஆயினும அதன் குணங்களைத் தெரிந்து கொண்டால் நாம் இன்னும் வேண்டிய அளவில் உட்கொள்ள வாய்ப்பு இருக்குமல்லவா?

மஞ்சள் வகையில் கப்பு மஞ்சள், கரிமஞ்சள், மர மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் என நான்கு வகைகள். அவைகளுள் முதல் இரண்டும் ஒரு இனத்தைச் சேர்ந்ததே. இவைகளில் நாம் எடுத்துக் கொண்ட பொருள் முதல் இரண்டும்.

கப்பு மஞ்சள் என்பதை பூசுமஞ்சள் என்று சொல்வர். இதை பெண்கள் குளிக்கும் போது கல்லில் உரைத்து உடம்பில் பூசிக் கொள்வர். சோப் பூசிக்கொள்ளும் பழக்கம் வந்த பின் இந்த மஞ்சளின் உபயோகம் குறைந்து விட்டது. ஆயினும் இப்பொழுதும் கூட சோப் உபயோகம் முடிந்த பிறகு, மஞ்சளை உபயோகப் படுத்தலாம்.

இதை உள்ளும் புறமும் உபயோகப்படுத்துவதினுல் உடல் பொன்மேனி யாகுமென்று சித்தர் நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. பெண்களுக்கு மஞ்சள் ஓர் முக்கியமான பொருளாகும். புருஷர்களை வசியப்படுத்தும் மூலிகையாம். உடலில் அதன் வாசனையிருக்கும்படி செய்து கொள்வது ஒன்று. அந்த வாசனையை நுகரும் ஆண்கள் அப் பெண்ணின் ஞாபகமே இருக்குமாம்.

மற்றொரு உபயோகம் :— இந்த பூசுமஞ்சளை சில துளிகள் தேங்காயெண்ணெயில் உரைத்து யோனியில் பூசிக்கொண்டால் தீய கிருமிகள் அவ்விடத்தில் அண்டாமலிருப்பதுமன்றி அவ்வுறுப்பு வலிவு பெறும். புணர்ச்சி செய்யுங் காலத்தில் ஆண்களுக்கு இன்பம் பல மடங்குகள் உயருகிறது. இதை உபயோகித்து வர அனுபவ வாயிலாக அளவை தெரிந்து கொள்ளலாம். இவ்வித உபயோகம் செய்பவர்களுக்கு யோனிக்குள் புற்று வியாதிகள் உண்டாகாது.

இதன் பெருமையை கீழே காணும் செய்யுட்களால் நன்கு அறிந்துக் கொள்ளலாம்.

“ பொன்னிறமாம் மேனி புலானுற்றமும் போகும்
மன்னு புருஷன் வசியமாம்—பின்னியெழும்
வாந்தி பித்ததோஷம ஐயம் வாதம்போம் தீபனமாம்
கூர்ந்த நறுமஞ்சள் தனக்கு ”

“ தலைவலி நீரேற்றம் சளையாத மேகம்
உளைவு தருபீனசத்தின் ஊடே—வலிசுரப்பு
விஞ்சு கடிவிஷமும் வீறுவிரணங்களும் போம்
மஞ்சள் கிழங்குக்கு மால் ”

கற்ப பிரயோகம்

கப்பு மஞ்சள் என்பது பெரிதாகவும் உருண்டை வடிவத்திலு மிருக்கும். கரி மஞ்சள் குச்சி குச்சியா யிருக்கும். இவை இருவகை யின் பேரிலும் மஞ்சள் நிறத்தை கொடுப்பதற்காக ஈய செந்தூரத்தை ஒரு வித மருந்தில் கலந்து அதில் மஞ்சளை பிரட்டி உலர்த்துவர். இந்த ஈய செந்தூரம் உடலுக்கு உபாதையைத் தரும். ஆகவே நம் வீட்டில் உபயோகிக்கும் மஞ்சளை முதலில் தண்ணீரில் ஊற வைத்து எடுத்து 7, 8 முறைகள் தண்ணீரில் அலம்பி சுத்தம் செய்து உலர்த்தி பிறகு இடித்து சமையலுக்கோ மருந்துக்கோ உபயோகப் படுத்த வேண்டும்.





இந்த முறையில் சுத்தம் செய்த கப்பு மஞ்சள் தூளை சூரணம் செய்து வைத்துக் கொண்டு காலையில் ஒரு சிட்டிகை வாயிலிட்டு ஒரு முழுங்கு தண்ணீர் சாப்பிடவேண்டும். இவ்விதம் சாப்பிட்டு வருவதால் உடலில் புண்கள், படை, குஷ்டம் முதலிய பிணிகள் தாக்காது. கருப்பு தேகம் பெற்ற பெண்களுக்கு சிறு வயதிலிருந்தே உண்டு வர பிறவிடையாகும் காலத்தில் கருப்பு நிறம் மாறி மாநிறச் சாயல் பெறுவர்.

மேற் பூச்சுக்கு

குழந்தைகள், பெரியோர்களுக்கு உடலில் அரிப்பு, சொறி, சிரங்குகளுக்கு கீழ்க்கண்ட எண்ணெயை தயாரித்துக் கொண்டு தேய்த்து காலையில் குளிப்பதோ, அல்லது காலையில் பூசி ஒரு மணி நேரம் இருக்கச் செய்து குளித்து விட்டு தொழிலுக்குச் செல்வதோ செய்துக் கொள்ளலாம். இந்த எண்ணெயினால் பலவித சருமநோய் கள் குணமானது அனுபவமுறை.

1. தேங்காயெண்ணெய் 1 லிட்டர்
2. குப்பைமேனி இலைச்சாறு 1 லிட்டர்
3. கரி மஞ்சள் தூள் 30 கிராம்

முதல் இரண்டு திரவங்களையும் சிறு நெருப்பில் காய்ச்சி சிடு சிடுப்பு அடங்கும் சமயம் மஞ்சள் பொடியை அதில் போட்டு கிளறி இறக்கி ஆறவைத்து எண்ணெயை வடித்து புட்டியிலடைத்துக் கொள்ளவும். இதை மேற்கூறிய முறைகளில் உபயோகிக்கவும். வெட்டுக் காயங்களுக்கு எண்ணெயில் சீலையை முக்கிப் போடவும்.

இருமல், தடுமம், பீனசத்திற்கு

உஷ்ணம் அதிகரிப்பினால் சிலர் கக், கக் என்று ஓயாது இருமி கஷ்டப்படுவார்கள், இரவில் தூக்கமே வராது. இதற்கு கரி மஞ்சள் தூள் கால் தேக்கரண்டியளவு, அப்பொழுது கறந்த பசும்பாலில் (காய்ச்சாமல்) கலக்கி உள்ளுக்கு காலை மாலை மூன்று நாட்களுக்கு சாப்பிட எந்த வைத்தியரிடமும் போகவேண்டிய அவசியமில்லாமல் குணமாகும்.

தடுமத்திற்கும், பீனசத்திற்கும் நல்லெண்ணெயில் கொஞ்சம் மஞ்சள் பொடி, ஒன்றிரண்டாய் உடைத்த 7, 8 மிளகு கலந்து காய்ச்சி தலையில் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். அன்று மோர் சேர்க்கக் கூடாது. மஞ்சள் கொம்பு ஒன்று எடுத்துக் கொண்டு நல்லெண்ணெயில் முக்கி நெருப்பில் சுட்டு புகையை மூக்கினுள் இழுக்கவும். இப்படி பிரதி தினமும் காலை மாலை சில நாட்கள் உபயோகிக்கவும். இதனால் மண்டைகுத்து, தொண்டை கரகரப்பு, மூக்கடைப்பு, பீனசம் முதலியவைகள் குணமாகும்.

*

சித்தர்கள் பற்றிய ஆய்வுத் தொடர் கட்டுரை:

நம் நாட்டுச் சித்தர்கள்!

[இரா. மாணிக்கவாசகன், எம். ஏ. எம். லிட்.]

— முன் மாதத் தொடர்ச்சி

இது வரை அகத்தியர் பற்றிப் பல்வேறு இலக்கியங்களில் காணலாகும் கதைகளைச் சுருக்கமாகக் கண்டோம். இவையல்லாமல் ரிக் வேதம், பாரதம், வால்மீகி இராமாயணம், கம்ப இராமாயணம், பழனித் தலபுராணம், திருக்குற்றலத் தலபுராணம், அவிநாசித் தல புராணம், திருவேங்கடத்தலபுராணம், திருச்செங்கோட்டுப்புராணம், திருநெல்வேலிப் புராணம், குடந்தைப் புராணம், மயிலைப் புராணம், மச்சபுராணம், காஞ்சிப்புராணம், புலவர் புராணம் முதலிய பல்வேறு நூல்களில் பல்வேறு வகையான குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் எனது தனிநூலுள் குறிக்கவுள்ளேன்.

இதுவரை கண்ட குறிப்புக்களில் இருந்து ஒருவாறு அகத்தியர் பற்றி முடிவு எடுத்தல் கூடும்.

அகத்தியரைத் தம் ஆசிரியராகத் தொல்காப்பியர் எங்கும் குறிக்கவில்லை; அகத்தியரைப் பற்றிய குறிப்பும் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ எங்கும் குறிக்கப்படவில்லை. 'என்ப, என்மனுர்' என வரும் இடங்கள் அவர் தம் ஆசிரியராய் விளங்கிய அகத்தியரையே குறிக்கும் என திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் கூறுவது சற்றும் ஏற்புடையதாகத் தெரியவில்லை. (History of the Tamils p p 214 P. T. Srinivasa Iyengar, Coomarasamy Naidu & Sons, Madras 1929) 'என்மனுர் புலவர்' என்பன போலும் குறிப்புக்கள் சுமார் 280-க்கும் மேற்பட்ட இடங்களில் வருகின்றன. அவற்றை ஊன்றிப் படிக்கின் தொல்காப்பியர் தமக்கு முன் இருந்த பல இலக்கண நூல்களைப் படித்துப் பின்னர் தெளிவான நூலை உருவாக்க கருதி இதனை எழுதியிருத்தல் கூடும் என்ற உண்மை புலனுகும்.

உண்மையில் அகத்தியர் தொல்காப்பியருக்கு ஆசிரியராக இருந்திருப்பாரேயானுல் குருகுலவாசியாக இருந்த தொல்காப்பியர் (கதையின்படி!) தம் ஆசிரியரைத் தம் நூலுள் குறிப்பிடாமல் விட்டு இருக்கமாட்டார். இவர் தான் அறியாமல் விட்டிருந்தாலும் சங்கப் புலவர்கள் 726 பேர்களில் ஒருவர் கூட இவரைக் குறிப்பிடாமல் விட்டது பெரும் வியப்பே! பெரும் இலக்கணப் படைப்பாளர்; சிவனிடமிருந்து தமிழ் கற்று வந்து பொதியமலையில் இருந்து தமிழ்

பரப்பியவர் ; முதல் இரு சங்கங்களில் அங்கம் வகித்தவர் ; இத்தனை சிறப்புக்களும் உடைய ஒரு புலவரை யாரேனும் ஒருவர் குறித்திருக்க கூடாதோ ? மேலும் இவர் வாழ்ந்ததாகக் குறிக்கப்படும் பொதியமலை பற்றிய குறிப்பு வரும் இடங்களிலும் பல்வேறு வகையான சிறப்புகள் குறிக்கப்படுகின்றன. அகத்தியர் இருந்தமை பற்றிய குறிப்பு யாண்டும் இல்லை. இதனை முன்னரே கண்டோம் எனவே அகத்தியர் என்ற இலக்கணப் புலவர் தொல்காப்பியருக்கு ஆசிரியராய் இருந்தார் என்பது கதையாகிறது. அகத்தியர் பெயரால் காணப்படும் நூற்பாக்கள் காலத்தால் பிற்பட்ட அப்பெயருடையார் யாரேனும் செய்திருக்கலாம் என்பது பொருந்துவதாக உள்ளது.

திரு. அ. கி. நாயுடு அவர்களின் கருத்து நம் கருத்துக்குத் துணையாக இருப்பது ஈண்டு குறிக்கத் தக்கது. ‘இயம்’ என்னும் தத்தித முடிபின் இலக்கணம் தோற்றுவித்தவன் புத்த மித்திரன் ஆவான். அகத்தியம் என்பது இயம் என்னும் தத்தித முடிவைப் பெற்றதாம். எனவே நச்சினார்க்கினியர் காலத்திற்குப் பின்னும், மயிலைநாதர் காலத்திற்கு முன்னும் வாழ்ந்த ஓர் அகத்தியன் என்பவனால் இயற்றப்பட்ட தென்க. நன்னூல் போலப் பயன்படாமையால் தானிருந்ததற்கு அடையாளமாய்ச் சில சூத்திரங்களை மட்டும் வைத்து விட்டு வாய்ப்பியம், அவிநயம், என்பனவற்றையும் அழைத்துக் கொண்டு விண்மீன் அகத்தியரைக் காண அகத்தியம் விண்ணுலகு அடைந்து விட்டது.'' (பக். 30 தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், அ. கி. நாயுடு, கோவை 1962)

அகத்தியர் பற்றியும் சங்கம் பற்றியும் தெளிவான கதை கூறும் முதல் நூலாக விளங்குவது இறையனார் களவியலே. இதன் காலம் கி. பி. 11-ஆம் நூற்றுண்டு. இக் கொள்கையை வளர்த்த பெருமை உரையாசிரியர்களைச் சாரும். அவருள் நச்சினார்க்கினியர் குறிக்கத் தக்கவர். இவருடைய காலம் கி. பி. 14-ஆம் நூற்றுண்டு.

மேலும் சங்கம் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் யாண்டும் புலவர் கூட்டத்தையோ அன்றி அவர்கள் கூடும் அமைப்பையோ குறித்த குறிப்புள்ளதாகத் தோன்றவில்லை.

இச் சொல்லை இப் பொருளில் முதன் முதல் பயன்படுத்தியவர்கள் பௌத்தர்களே எனலாம். (with these first five disciples Buddha founded the Sangha or the holy brotherhood of monks from now on, every follower of the Buddha who became a priest entered the Sanga pp 24 Glimpses of Buddhism. N. Ramesan, published by the Govt. of Andhra pradesh 1961 என்பது காண்க). புத்தர் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம்சரணம் கச்சாமி என்பதும்

காண்க. எனவே இத்தகைய கதைகள் தமிழக வரலாற்றில் ஏற்பட்ட இருண்ட காலத்தின் விளைவாக வளர்ந்திருக்கக் கூடும்.

இனி மிகப் பழையதாகக் கருதப்படும் ரிக் வேதத்தில் இவர் பற்றிய குறிப்பு வருகின்றது. கி. மு. 700-ஆம் ஆண்டைச் சார்ந்த வர் எனக் கருதப்படும் வால்மீகி (பக். 20 தொல். எழுத்து-நச்சினர்-கழகம், சென்னை 1966) இராமாயணத்திலும் அகத்தியர் பற்றிய குறிப்பு வருகின்றது. இவ்விரு அகத்தியரும் வேறு வேறு எனக் கொள்ளத் தேவையில்லை. வேதம் மிகத்தொன்மையானது போலவே வால்மீகி குறிக்கும் இராமாயணமும் தொன்மையானதே என்பதில் ஐயமில்லை. எனவே வேதத்தில் குறிக்கப்படும் அகத்தியரே தென் மலை இருந்த அகத்தியர் எனக் கொள்வதில் (வேறு சான்று கிடைக்கும் வரை) எவ்வித பிழையும் இல்லை. ஞானியர் மொழி, இடம், காலம் இவற்றைக் கடந்தவர் என்பதை நினைவில் கொள்வது நலம். கம்பர் வால்மீகியின் இராமாயணத்தை ஒட்டியே எழுதினர் ஆதலின் கம்பர் காட்டும் அகத்தியர் வால்மீகி காட்டும் அகத்தியரின் வேருன வர் அல்லர் என்பதும் விளங்கும்.

அடுத்து, பொதிய மலையையும், அங்கு முனிவர் இருந்தார் என்பதையும் முதலில் குறிக்கும் இலக்கியம் சிலப்பதிகாரமேயாகும் 'தெய்வமால்வரைத் திருமுனி' (அரங்கேற்று-1) 'மாதவ முதல்வன் மலைவளம் கொண்டு (அடைக்கலம் 14) எனவும் வரும் குறிப்புக்களில் அகத்தியர் பற்றிய சேதி இல்லை. மணிமேகலையே முதன்முதல் 'அமர முனிவன் அகத்தியன்' (பதிகம் 11) எனத் தெளிவாகக் குறிக்கின்றது. இது முன்னர் கண்ட வீரசோழியம் குறிக்கும் கருத்துக்குத் துணை போவதாக உள்ளது எனத் தோன்றுகின்றது. வேறு இலக்கியங்களில் இது பற்றிய குறிப்பு இல்லை என்னும் ஒரே காரணத்தால் இதனை மறுப்பது ஏற்புடையதன்று. காலத்தின் சூழலால் எத்துணையோ உண்மைகள் மறைக்கப் படுகின்றன ; மறைந்து போகின்றன. ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களின் கருத்துப்படி புத்தர் வழிபாடே விநாயகர் வழிபாடாயிற்று. இக் கருத்தினைச் சாதாரண மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தக்க காரணங்களைக் காட்டி, அவர்தம் பௌத்தமும் தமிழும் என்ற நூலுள் எழுதியிருப்பது அறிஞரின் சிந்தனைக்கு நல்ல விருந்தாகும். அது போல் புத்தர் ஞானம் பெற்ற போதி என்ற சொல்லில் இருந்து தோன்றிய பொதிகையில் பௌத்த துறவியான அகத்தியர் ஒருவர் இருந்திருத்தல் வேண்டும் என்றால் சற்று ஏற்றுக்கொள்ளத் தயங்க நேரிடும். சங்க காலத்திற்குப் பின்னரும், சிலம்பு, மேகலை காலத்திற்கு முன்னரும் இவர் இருந்திருக்கலாம். எனவே வீரசோழியம் கூற்றையும் மெய்யெனக் கொண்டு, மணிமேகலையுட்பட பௌத்த

சமயக் கருத்தினையும் துணைகொண்டு ஆராயின் அகத்தியர் என்ற பெயரில் பொதிகையில் வாழ்ந்தவர் ஒருவர் உண்டு என்பது விளங்கும்.

வட மொழியில் அகஸ்ய என்ற சொல்லுக்கு அழியாதவர் என்பது பொருள். (Akshyya-undecaying pp 3, A Sanskrit - English Dictionery - Monier Williams - Oxford 1872) முன்னர் குறித்த அகத்தியர் இருவரும் இப் பொருளோடு அப் பெயர் தாங்கி இருத்தல் வேண்டும்.

இவரேயன்றி அகத்தீ (மூலாக்கினி) வளர்த்த யோகியாக வேறு ஓர் அகத்தியரும் இருந்திருத்தல் வேண்டும். இவர் சங்க காலத்திற்குப் பிற்பட்டவராகவும், திருமூலர்க்கு முற்பட்டவராகவும் இருந்திருத்தல் வேண்டும். இவரே பெரும் சித்தராய் விளங்கினார் எனலாம். மருத்துவம் போன்ற பல துறைகளிலும் தொண்டாற்றியவர் இவரே என்பதில் பிழையில்லை. புராணங்களில் குறிக்கப்படுபவரும் இவரேயாதல் வேண்டும். தமக்கெனக் குழூஉக்குறி கொண்டு பழகி வந்த - வரும் - சித்தர் பாரம்பரியத்தின் தலைவராய் விளங்கிய அகத்தியரின் கருத்துக்கள் மறையாகவே (மறைக்கப்படுதலின் மறை; வேதம் என்பதும் அதுவே ; வேய்தல் - மூடுதல்) நீண்ட காலம் இருந்து பின்னர் எழுதப்பட்டன. ஆகவே தான் தற்போது அகத்தியர் பேரில் கிடைக்கும் மருத்துவ நூல்கள் அனைத்தும் புதிய சொல் ஆட்சியினை யுடையனவாகக் காணப்படுகின்றன.

இவருக்குப் பின்னர் இப்பெயரோடு இலக்கண ஆசிரியர் யாரேனும் இருந்திருத்தல் கூடும். இங்ஙனம் அகத்தியர் என்ற பெயரில் நான்கு அல்லது ஐந்து பேர் இருந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது. இவர்கள் அத்துணை பேரையும் ஒன்றாக இணைத்து குழப்பியதோடு அல்லாமல், தலைவர் வழிபாட்டு (Hero worship) முறையின் வண்ணம் பல்வேறு கதைகளும் கட்டப்பட்டு அகத்தியர் பற்றித் தெளிவில்லாமல் ஆக்கிவிட்டனர்.

இவர் பற்றித் தெளிவான ஆராய்ச்சியினை எனது தனிநூலுள் தருவேன். ஆதலின் இதனை இவ்வளவோடு நிறுத்துவன். அறிஞர் பெருமக்கள் பலரும் பல்வேறு காலங்களில் இருந்து நாட்டுக்குக் குறிப்பிடத் தக்க தொண்டு புரிந்த அகத்தியரைப் பற்றி மேலும் ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராயத் தூண்ட எனது இக் கட்டுரை கடுகளவேனும் துணைபுரியுமேயானால் அதுவே இக் கட்டுரையின் பயனாக அமையும் என்பதோடு அமைகிறேன்.

அடுத்த இதழில் :- " அகப்பேய்ச் சித்தர் "

மூலிகை அகராதி

விக—

— முன் மாதத் தொடர்ச்சி

கீரை

கீரை என்ற வார்த்தைக்குப் பொதுவாக மூலிகையினத்தில் உணவாகக் கொள்ளும் பச்சிலைகட்குமட்டும்தான் கீரை என்பார்கள். பரமனுக்கு பாமாலையுடன் பச்சிலை சறுகுகளை அர்ப்பணம் செய்வதும் தமிழ் நாட்டின் பண்டைய மரபு. இவ்வாறு மலர்களும் இலைகளும் கோயில்களில் அர்ச்சனை செய்வதில் பச்சிலைகளை பத்ரம் என்பார்கள். இவ்வாறே உணவாகக் கொள்ளும் இலைகளைக் கொண்டு வந்து விற்பனை செய்யும் அங்காடி கீரைகள் பலப்பல விதமாகும். மரத்தின் இலைகள், செடிகளின் இலைகள், பூண்டுகளின் இலைகள் எல்லாமே நமக்கு உதவுபடியாகும் மூலிகை இனங்கள் தாம்! இங்ஙனம் இறை பணிகளுக்கும், நமக்கு இரையாகவும் தம்மை அர்ப்பணிக்கும் மூலிகை இனங்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய இயலும்?

பல விதமான கீரையினங்களை கிராம மக்கள் கொண்டு வந்து நகர வீதிகளில் ராகம் பாடிக் கூவி விற்பனைச் செய்யும் அழகுதான் என்னே! எல்லாவித உயிர்ச் சத்துக்களும் அடங்கியுள்ள இந்தக் கீரையினத்தை நாம் எந்த அளவுக்கு மறந்து வாழ்கிறோமோ, அந்த அளவுக்கு நம்மை இனம் தெரியாத, பெயர் தெரியாத பிணிகளும் பிடித்து நாட்டில் பெருகி விடுகிறது.

எனவேதான் கீரை என்ற தலைப்பில் இந்த அகராதியில் இவைகளின் குண விசேஷங்களைப் பற்றி எழுதப்படுகிறது.

முளைக் கீரை

வேறு பெயர்கள் : மொளகீரே, ஆங்கிலம் : யங்கிரீன்ஸ்.

விபரம்

பொதுவாக தமிழகத்தின் எல்லா நகரங்களிலும் காய் கடைகளில் விற்கக்கூடிய கீரையினம். இது கீரைத்தண்டின் இளம் பருவத்தில் வேருடன் பிடுங்கி வந்து விற்பார்கள்.

சுவை : இனிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு.

குணதிசயம்

குளிர்ச்சியுண்டாக்கி, பசித்தூண்டி, வெப்பகற்றி, ருசியுண்டாக்கி, பலகாரி, உடல் வளமாக்கி, மலமிளக்கி.

குறிப்பு :—முளைக் கீரைக்கு ருசி அதிகம்.

கலவைக் கீரை

வேறு பெயர்கள் : காலாங்கீரை, ஆங்கிலம் : மிக்ஸட்கிரீன்

விபரம்

பல வகைப் பூண்டு இனங்களின் கலப்பு இலைகள் இது. இயற்கையாக எங்கும் கிடைக்கக் கூடியவை. இவைகளையும் பறித்துக் கொண்டு வந்து விற்று பிழைப்பு நடத்துவார்கள் கிராம மக்கள்.

குணதிசயம்

அகட்டு வாய்வகற்றி, மலமிளக்கி, வாத பிணி விலக்கி, முத்தோடமகற்றி, குடல் வாய்வகற்றி, சிறுநீர் பெருக்கி, வாய்வகற்றி.

புளிச்ச கீரை

வேறு பெயர் : புளிச்சாரக்கீரை, ஆங்கிலம் : சாவுர் கிரீன்.

விபரம்

மேட்டு நிலங்களில் பயிராகும் துவரை, கடலை, பயறு போன்ற செடிகளில் வளரும் இந்த செடிக்கு காசினி செடி என்பார்கள். இதன் இலை தான் புளிச்சக்கீரை என்பது. விரல் போன்ற இலைகள் பசுமையாயும் புளிப்பு ருசியையும் உடையதாகும்.

குணதிசயம்

வாதமடக்கி, குளிர்ச்சியுண்டாக்கி, நுட்புழுக் கொல்லி, புண்ணாற்றி, பித்தம் பெருக்கி, மலமிளக்கி, சிறுநீர் பெருக்கி.

(தொடரும்)

அனுபவம் உணர்த்தும் உண்மை!

சி. மஞ்சுளா, 9—12—72
மேல் வல்லம்.

திரு. ஆ. இரா. கண்ணப்பர் அவர்கட்கு, வணக்கம்.

தங்கள் சிறப்பேடாகிய 'நம் நாட்டு மூலிகைகள்' 2-ம் பாகத்தில் எழுதியிருக்கும் 'பொற்கொடி' யை படித்து, எனக்கு வந்திருந்த காமாலையைப் போக்கினேன். தங்களைப் போன்ற பல மருத்துவ வல்லுனர்கள் தோன்றி உழைக்க வேண்டியது அவசியமாகும். 'மூலிகை மணி' ஏட்டின் மூலமும், வேறு பல வழிகளின் மூலமாகவும் தளராச் சேவை புரிந்து தமிழ் மருத்துவம் தழைத்தோங்க பாடுபட்டு வருவதற்கு தங்களது நன்முயற்சிகளெல்லாம் நனிசிறக்க, வெற்றி பெற்று சிறப்படைதற்கு நல்லாசி அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

* * * * * * * * *

பி. முத்துசாமி, கொங்கணுபுரம்.
சேலம் Dt. தமிழ்நாடு.

அன்புள்ள மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு,

தாங்கள் கூறியிருந்தபடி நாமக்கட்டி 1 துண்டு, சுக்கு 1 துண்டு பெருங்காயம் 1 துண்டு சேர்த்து சந்தனக் கல்லில் அரைத்து அதை நெற்றியில் பூசி, உள்ளுக்கு புளியங்கொட்டையளவு சாப்பிட்டதில் ஒற்றைத் தலைவலியில் இருந்து நலம் பெற்றுள்ளேன். என்னுடைய அளவுகடந்த மகிழ்ச்சியும் அந்த 'மூலிகை மணி' ஆசிரியருக்கே உரியது. வாழ்க மூலிகை மணி! இப்படிப்பட்ட பெரியோரை பல்லாண்டு காலம் வாழ்விக்க நான் கடவுளை வேண்டுகிறேன்.

* * * * * * * * *

என். மணி, 58, கிராமத் தெருவு,
சாத்திமா நகர், சென்னை-7.

ஐயா, தங்கள் மூலிகை மணி வாசகர்களில் நானும் ஒருவன். நம் நாட்டு மூலிகைகள் (முதல் பாகம்) என்னும் புத்தகத்தில் 'குமரி' என்னும் பகுதியில் குமரி நெய்யைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதன்படி நான் குமரி நெய்யை தயாரித்து சாப்பிட்டும் வருகிறேன். என்னுடைய அடிவயிறு உஷ்ணம், மலச்சிக்கல் யாவும் குணமாகி, மெலிந்திருந்த நான் சற்று அபிவிருத்தி அடைந்தும் வருகிறேன். அதற்காக தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. இறைவன் தங்கட்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து சித்த வைத்தியம் மேலும் வளர்ச்சி பெற அருள் புரிவாராக.

இதயஒலி

ஆர். காசி நாடார், 23, Ist St., சிதம்பர நகர்,
தூத்துக்குடி-3.

உயர்திரு, ஆ. இ. கண்ணப்பர் அவர்களுக்கு,

ஐயா, வணக்கம். இப்பவும் மாவிலங்கம் இலையுடன் மிளகு சேர்த்து அரைத்து மாத்திரையாக தயார் செய்து காலை, மாலை, ஒரு மாத்திரை வீதம் சுமார் மூன்று வருடங்கள் சாப்பிட்டு வந்ததில் உடம்பில் விழுந்திருந்த வெள்ளை நிற புள்ளிகள் மறைந்து விட்டது. தங்கள் மருத்துவ சேவை மிகவும் பாராட்டுதற்குரியது.

வாழ்க மூலிகை மணி !

இப்படிக்கு, ஆர். காசி நாடார்

ஆர். எம். சவுரிநாராயணன், 17, West Pandian Akil St.,
திண்டுக்கல் ரோடு, மதுரை-1

ஐயா, தங்களுடைய " நம் நாட்டு மூலிகைகள் " 6-பாகமும் தருவித்து படித்து சில முக்கியமானதும் சுலபமானதுமான மருந்து செய்து சாப்பிட்டு குணமடைந்தேன். அதில் பிரம்மதண்டு வஸ்திர காயத்தூள் செய்து எனது 5-வது பையனுக்குக் கொடுத்ததில் தீராத மார்புச்சளியை பத்து நாளில் குறைத்து, மறுவாரத்தில் பூராவும் குணமாகி விட்டது மிகவும் குறிப்பிடத் தக்கது.

தங்கள் அன்புள்ள, ஆர். எம். சவுரிநாராயணன்

இரா. ஸ்ரீநிவாஸன், மலையப்பாளையம்,
ஆசிரியர், நடுநிலைப் பள்ளி, ஒழலக்கோவில் அ. நி. கோபி Tk.

அன்பு மிகு ஐயா, வணக்கம்.

மூலிகை மணியின் ஜீவன், சித்த வைத்தியக் குழந்தையைத் தனது வைத்திய மரபை மூடிமறைக்காமல் வளரச்செய்யப் போகிறது அப்பொழுது நாடெங்கிலும் சித்த வைத்தியத்தின் மறுமலர்ச்சி ஏற்படத்தான் போகிறது. அந்த மறுமலர்ச்சியின் புகழ் நமது ஆசிரியர் வேலூர் சித்த மருத்துவ மாமேதை அவர்களின் திருப்பணியை சிரம் தாழ்ந்து கரம் குவித்துப் போற்றும். ஆகையால் வெற்றி கிட்டும்! திக்கெட்டும் முழங்கும்!! 'சித்த மருத்துவப் பணி மனை' என்ற பெயர்ப் பலகைகள் விரைவில் கம்பீரமாகக் காட்சி தரும்.

இப்படிக்கு, இரா. ஸ்ரீநிவாஸன்

உ

மூலிகை மணி

மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர் அவர்களை

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி

ஆகிய கிழமைகளில்

23, கிளப் ரோடு - கிழக்கு, ஷெனாய் நகர்,

சென்னை - 30. போன் : 666249

சனி, ஞாயிறு இருநாட்களில் மட்டும்

4, சாதுகாரமடம் தெரு-2, சலவன்பேட்டை,

வேலூர்-1. (வ. ஆ.) போன் : 726

ஆகிய இரு இடங்களில் நேரில் சந்தித்து

மருத்துவ ஆலோசனையும், மருந்தும் பெறலாம்.

ஆலோசனை கட்டணம் உண்டு.

நோயாளிகள் எமது ஆலோசனையும், மருத்துவச் சிகிச்சையும் பெற விரும்பினால், மேல்கண்ட விவரப்படி சென்னை, அல்லது வேலூருக்கு குறித்த நாட்களில் வந்து ஆலோசனையும், கைநாடி, உடல்நிலை கண்டு முறைப்படி சிகிச்சை பெறலாம்.

நேரில் வர வசதியற்றவர்கள் எங்கள் நூல்களில் எழுதி இருக்கும் சிகிச்சை முறைகளைப் படித்து, இலகு முறையில் செய்து குணம் காணலாம். கடித மூலமாக சிகிச்சையோ, ஆலோசனையோ பெறுவது பயன் தராது. சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்போர் ரிப்ளை கார்டு அல்லது தபால் தலை வைத்த கவர் அனுப்பவேண்டும்.

மூலிகை மணி வெளியீடுகள், மருந்துகள்-சென்னை, வேலூர் ஆகிய இரு இடங்களிலும் கிடைக்கும்.

எமது வெளியீடுகள் :

நம் நாட்டு மூலிகைகள்	1-ம் பாகம்	ரூ. 3	00
நம் நாட்டு மூலிகைகள்	2-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	3-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	4-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	5-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	6-ம் பாகம்	3	00
நோயும் மருந்தும்	1-2 பாகம்	3	00
நோயும் மருந்தும்	3-4 பாகம்	2	00
விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்		3	00
புகழ் பெற்ற மூலிகைகள்		0	60
மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்		0	60
பயன் தரும் பத்துக் கீரைகள்		0	60

ஒரு புத்தகத்திற்கு தபால் செலவு 0-25 சேர்த்து அனுப்பவும்.

மொத்த புத்தகமும் தபாலில் பெற

புத்தக விலையுடன் ரூ. 2—75 சேர்த்து கீழ்க்கண்ட

முகவரிக்கு மணியாடர் அனுப்பி பெறலாம்.

முகவரி **ஆ. இரா. கண்ணப்பர்,**

மூலிகை மணி அலுவலகம்

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

Printed at Mooligai Mani (P) Press, Vellore N. A.
Printer, Editor & Publisher Dr. A. R. Kannappar, R. M. P.
59, Maasilamani Muduli Street, Vellore, N. A.